GOKULAM

நவம்பர் 2007 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

வின்னர்ஸ்!



சிறுகதைச் சிறப்பிதழ்!





கலக்க வருது சச்சின் காமிக்ஸ்!

கோகுலம் 25

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்



தொடர்ச்சி 3-ஆம் அட்டையில்...

கல்கி

கோகுலம்

நவம்பர் 2007 மலர் : 25 இதழ் : 10

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்

சிறுகதைச் சிறப்பிதழ்!



உள்ளே...

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி
உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324
தொலைநகல் :
044 - 2225 1021
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...

இனிய தீபாவளி வாழ்த்துகள்! இந்த இதழ் 'சிறுகதைச் சிறப்பிதழாக' உங்கள் கரங்களில் தவழ்கிறது. கதை கேட்பதும், சொல்வதும் எல்லோருக்கும் பிடித்த விஷயம். அதிலும் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா மடியில் படுத்துக்கொண்டு கதை கேட்கும் சுகத்துக்கு ஈடு இணையே கிடையாது. இந்த சுகம் இப்போது அரிதாகி வருகிறது. உங்கள் வீட்டில் தாத்தா, பாட்டி இருந்தால் அவர்களிடம் கதை கேளுங்கள்.

இந்த இதழில் வெளியாகியுள்ள கதை, கட்டுரைகளுக்கு சில குட்டீஸ்களிடம் தலைப்புகளைக் கொடுத்து,



எழுதச் சொல்லி, அவர்களின் புகைப்படத்துடன் வெளியிட்டுள்ளோம். சென்ற இதழில் வெளியான மினி கோகுலத்துக்கு நல்ல வரவேற்பு! இந்த இதழிலும் வெளியாகியுள்ளது. அந்த எட்டுப் பக்கங்களையும் பிரித்து எடுத்து, மினி கோகுலத்தை உருவாக்குங்கள். 'கோகுலம் சிறுவர் சங்கம்' உறுப்பினர் அட்டை தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவில் அனுப்பப்படும். மீண்டும் தீபாவளி வாழ்த்துகள்!

அன்புடன்
கோகு

கடித மாலை

'காணாமல் போன தேவதை' பரிசுக் கதை நல்ல கற்பனை வளம்! சி.இராகவி தொடர்ந்து எழுதினால் வருங்காலத்தில் மிகச் சிறந்த குழந்தை எழுத்தாளராக நிச்சயம் வர முடியும்!

- இ.பு.ஞானப்பிரகாசன், சென்னை

கவிதைப் பூங்கா கமகமக்கிறது! கச்சிதமாக முணுமுணுத்துப் பாடவும் வைக்கிறது. நல்ல கருத்துகளுக்கு வழிகாட்டி, ஒளிகூட்டி விட்டது கோகுலம்!

- த.சந்தானக்குமார், திருநெல்வேலி

சீனாவில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் பற்றிய விஷயங்கள், 'யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே' என்பது போல செய்தி கோர்வை அருமை.

- எல்.கே.நர்கீஸ், த.முருங்கப்பட்டி

'நான்தான் ராஜா' காமிக்ஸ் பிறரை எவ்விதத்திலும் கேலி, கிண்டல் செய்யக்கூடாது என்பதை தெளிவாய் உணர்த்தியது!

- எம்.சிவரஞ்சனி, வலங்கைமான்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேர்ந்திருக்கிறேன். எனது போட்டோவும் வந்தது. சிறுவர் சங்க உறுப்பினர் அட்டை வரவில்லையே?

- மு.ராம்பிரசாத், சங்கரன்கோவில்

(உறுப்பினர் அட்டை தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவில் அனுப்புவோம். - ஆர்)

தேனுண்ட வண்டாக்கி விட்டீர்கள்! திகட்டாத செய்திகளைத் திரட்டித் தந்து தித்திப்பாக்கி, நாங்களே உருவாக்கி, நாங்களே பாதுகாத்துப் போற்றும்படி செய்துவிட்டீர்கள் மினி கோகுலத்தை!

- ஆர்.கே.கார்த்திக், எட்டாம் வகுப்பு, திசையன்விளை

தேனுண்ட வண்டு!



நான் எவ்வளவோ ஆசையோடு சிறுவர் சங்கத்தில் சேர்ந்து நம் புகைப்படம் வெளியாகும் என்று இருந்தேன். ஆனால் இதுவரை வெளியாகவில்லை!

- ஏ.விக்ரம், அதியமான்கோட்டை

(கூப்பன் அனுப்பிய அனைவரின் புகைப்படங்களும் நிச்சயம் வெளியாகும்! - ஆர்)



கோகுலத்துக்கு ஜே!

ஹாய் ஃப்ரெண்ட்ஸ்! நான்தான் பிரவீன். ரொம்ப நாளைக்கு அப்புறம் 'மீட்' பண்றேன். போன வருஷம் அக்டோபர் இதழில் 'போஸ்டரைச் சேகரிங்க; பரிசுகளை வெல்லுங்க' போட்டியை அறிவிச்சது உங்க எல்லோருக்கும் நினைவிருக்கும். ஆறு மாசங்களுக்கு நடந்த அந்தப் போட்டியில், நீங்க நிறைய பேர் கலந்துகிட்டீங்க. கோகுலத்துக்கு நிறைய ஃப்ரெண்ட்ஸ்ஸை அறிமுகம் செய்தீங்க!

போட்டியின் முடிவு ஜூலை 2007ல் வெளியாச்சு. பத்து குட்டீஸை 'தீம்



● ஆசிரியரிடம் பரிசு...





பெற்றோர்களுடன் குட்டீஸ்...

வின்னர்ஸ்!

பார்க்' போக 'செலக்ட்' செய்தோம். அவங்களுக்கு எல்லாம் கடிதம் அனுப்பி செப்டெம்பர் 30ஆம் தேதி சென்னைக்கு வரச் சொன்னோம். 'கிஷ்கிந்தா' தீம் பார்க்தான் போகிற இடம். வெற்றி பெற்ற ஒவ்வொரு குட்டி வின்னர்ஸோடு அவங்க பேரண்ட்ஸ் யாராவது ஒருத்தர் வரலாம்னு சொல்லியிருந்தோம்.

செப்டெம்பர் 29ஆம் தேதி இரவிலிருந்தே





சரியான மழை! விடியற்காலை ஆறு மணிக்கு கூட மழை வந்துட்டே இருந்துச்சு. 'அடடே! இப்படியே மழை தொடர்ந்தா எப்படி கிஷ்கிந்தா போறதுன்னு' கவலையா இருந்துச்சு. ஆனா, ஆறு மணிக்கு மேலே வருண பகவான் 'டாட்டா' காட்டிட்டு கிளம்பிட்டார். ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு!

கோகுலம் அலுவலகத்துக்கு ஒவ்வொரு வின்னர்ஸா வர ஆரம்பிச்சாங்க. முதல்ல வந்தவங்க **இராணிப்பேட்டை காயத்ரி**. அவங்க அம்மாவோடு வந்தாங்க. அப்புறம் **ஆற்காடு கவிதா, கும்பகோணம் கைலாஷ், தூத்துக்குடி சாந்தி, நெய்வேலி அபிஷேக், சென்னை கலைச்செல்வி** வந்து சேர்ந்தாங்க. எல்லோரையும் உதவி ஆசிரியர் வரவேற்றார். பத்து வின்னர்ஸில் நாலு வின்னர்ஸான **நம்பியூர் ஜெயக்குமார், நீர்விளங்குளம் கணேசன், கோவை மௌரியா, திருநெல்வேலி, கனகசுப்பு லெட்சுமி** வரலைன்னு சொல்லிட்டாங்க. கடிதத்துல குறிப்பிட்டுள்ள நிபந்தனைப்படி இவங்களை வேறு சமயத்தில் கூட்டிப் போக முடியாது. ஆனாலும் இவங்களுக்கு புத்தகம் பரிசா அனுப்பறோம்!

ஆறு வின்னர்ஸையும் வரவேற்று வாழ்த்தினார் கோகுலம் ஆசிரியர். அத்துடன் நினைவுப் பரிசா, அறிவுக்கு விருந்தா புத்தகங்களும், நாவுக்கு விருந்தா 'கேக்' பெட்டியும் கொடுத்தார்.

* விடை பெறும் சமயம்....







புத்தகங்களைப் பரிசா கொடுத்தது யார் தெரியுங்களா? கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியர் **ஈ.எஸ்.ஹரிஹரன் (ரேவதி)**. ஒவ்வொரு புத்தகத்திலும் தமது கையொப்பமிட்டு அன்போடு கொடுத்திருந்தார்.

''உங்களோட லட்சியம் என்ன? வருங்காலத்துல என்னவா வரணும்னு ஆசைப் படறீங்க?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''நான் கிரிக்கெட் பிளேயரா வருவேன்'' என்றார் அபிஷேக்.

அதேமாதிரி ஒவ்வொருவரும் தங்கள் லட்சியத்தைச் சொன்னாங்க.

பத்து மணிக்கு இரண்டு வேன்களில் கோகுலம் அலுவலகத்தில் இருந்து கிளம்பினோம். அரை மணி நேரத்தில் கிஷ்கிந்தாவில் ஆஜர்!

குட்டி வின்னர்ஸ் ஜாலியா 'என்ஜாய்' பண்ண ஆரம்பிச்சாங்க. கொஞ்ச நேரத்துலயே எல்லோரும் 'திக் ஃப்ரண்ட்ஸ்' ஆயிட்டாங்க. நீர்சறுக்கு, டிராகன் டிராவல், சென்னை குற்றாலம், 3D திரைப்படம்னு ஒவ்வொரு விளையாட்டா 'என்ஜாய்' பண்ணினாங்க.

'த்ரிலேரியம்'னு ஒரு சூப்பர்ஷோ! நம்மை எல்லாம் இருக்கையில் உட்கார வெச்சுட்டாங்க. விளக்குகளை அணைச்சுட்டாங்க. எதிரில் ஒரு திரை. அதுல ஒரு ரெயில்வே டிராக். அந்த டிராக்ல ஒரு ரயில் வேகமா போகுது. காடு, மலை, குகை எல்லாவற்றையும் தாண்டிப் போகுது. அப்போ நாம உட்கார்ந்து இருக்கிற இருக்கையும் மேலும் கீழுமா ஆடுது. அந்த ரயில்வே டிராக்ல நாமும் போற மாதிரியும், மலையில் இருந்து குதிக்கற மாதிரியும் இருக்கு. உண்மையிலேயே 'த்ரிலிங்கான' ஷோதான்!

மதியம் அங்கே உணவு. கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு மிச்சமிருந்த 'ரைட்ஸ்' எல்லாம் போனாங்க. எல்லாம் முடிஞ்சு கிஷ்கிந்தாவை விட்டு வெளியே வந்தப்ப நேரம் மாலை ஐந்து மணி.

''எப்படி இருந்துச்சு?'' என்று கேட்டோம்.

''ரொம்ப ஜாலியா இருந்துச்சு'' என்றார் கைலாஷ்

''இந்த அனுபவத்தை மறக்கவே முடியாது'' என்றார் கவிதா.

''கோகுலத்துக்கு ரொம்ப தேங்க்ஸ்!'' என்றார் சாந்தி.

''எல்லோருமா சேர்ந்து கோகுலத்துக்கு 'ஜே' போடுவோங்க'' என்றார் அபிஷேக்கின் அப்பா.

எல்லோரும் உற்சாகமாக 'ஜே' போட்டார்கள்!

அட்டை,படங்கள்: **ஸ்ரீஹரி**

பால் பழம்



ராமசாமி ஒரு ஏழை விவசாயி, அந்த ஊரிலிருந்த பண்ணையார் கோவிந்தனின் பண்ணையில் வேலை பார்த்து வந்தான். அவன் மனைவியும் பண்ணையார் வீட்டு வேலைகளைச் செய்து வந்தாள். கணவனும் மனைவியும் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்தனர்.

பண்ணையார் கோவிந்தன் எட்டு முழ வேட்டியை இடுப்பில் ஒரே சுற்றாக சுற்றிக்கொண்டு, மதுரை முக்குறுணிப் பிள்ளையாரைப் போல திண்ணையில் உட்கார்ந்தபடி, எதையாவது தின்றுகொண்டு, அதட்டி வேலை வாங்கிக் கொண்டிருப்பார். வேலை வெட்டி எதுவும் செய்யாமல் உட்கார்ந்தே இருப்பதனால் அடிக்கடி நோய்வாய்ப் படுவார். இவரை வைத்து வைத்தியர்கள் அந்த ஊரில் பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒருமுறை கடுமையான வயிற்று வலியால் அவதிப் பட்டார் பண்ணையார். தாங்க முடியாத வலி. பாவம்! துடித்துப் போய்விட்டார். ராமசாமி தான் ஓடிப்போய் வைத்தியரைக் கூட்டிக்கொண்டு வந்தான். நோய் தீரும் வரையில் அருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டான். நோய் தீர்ந்த பின் தனிமையில் இருந்த பண்ணையார், ராமசாமியை நினைத்துப் பார்த்தார்.

'நான் இவ்வளவு வசதியாக இருக்கிறேன், நல்ல சத்தான உணவுகளைச் சாப்பிடுகிறேன். சின்ன உடல் உபாதை வந்தாலும் மருத்துவரை வரச்சொல்லி மருந்து சாப்பிடுகிறேன். ஆனாலும் எனக்குத்தானே நோய்கள் வரிசையாக வருகின்றன. ராமசாமிக்குச் சரியான சாப்பாடுகூட கிடையாது. ஒருநாளும் அவன் மருத்துவரைப் போய் பார்த்ததில்லை. இது எப்படி?'

அப்போது அங்கே ஏதோ பொருளை எடுக்க வந்தான் ராமசாமி.

''அடேய் ராமா! இங்கே வாடா'' என்று கூப்பிட்டார் பண்ணையார்.

ஓடிவந்து கை கட்டி நின்றான் ராமசாமி. பண்ணையார் தமது சந்தேகத்தைக் கேட்டார்.

''தினமும் காலையில வயிறு நிறைய பால், பழம், சர்க்கரை சாப்பிடுவேங்க. அதுதான் எனக்கு பலம்'' என்றான் ராமசாமி.


ராமசாமி வீட்டில் ஒரு பசு

சர்க்கரை

கிராமக் கதை : சக்கரத்தாழ்வார்




தலைப்பு : எஸ்.சோபியா



ஓவியம் : ராமு

மாடுகூட கிடையாது. வெளியில் காசு கொடுத்து பால் வாங்கவும் அவனால் முடியாது. பின் எப்படி தினமும் பால் குடிக்க முடியும்? பொய் சொல்கிறானோ என்ற சந்தேகம் பண்ணையாருக்கு வந்தது. ராமசாமி வெகுளி - விளையாட்டுக்குக்கூட பொய் சொல்ல மாட்டான் என்பது பண்ணையாருக்குத் தெரியும். எனவே தமக்கு நெருக்கமான வேலைக்காரன் மாதவனை மறுநாள் காலையில் ராமசாமி வீட்டுக்கு ரகசியமாகச் சென்று பார்த்து வரக் கட்டளையிட்டார்.



உடல் ஆரோக்கியம் என்பது உணவில் மட்டும் இல்லை. உடலுழைப்பிலும் உள்ளது!

மறுநாள் அதிகாலையிலே எழுந்த ராமசாமி, வயல்வெளிக்குச் சென்று காலைக் கடன்களை முடித்துவிட்டு வந்தான். அவன் பின்னாலே பதுங்கி வந்த மாதவன், வீட்டின் முன் இருந்த வேப்ப மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டான். மரத்திலிருந்து ஒரு குச்சியை ஒடித்து பல் விளக்கி விட்டு திண்ணையில் உட்கார்ந்தான் ராமசாமி.

''பால், பழம், சர்க்கரை கொண்டா காமாட்சி'' என்றான்.

அவன் மனைவி ஒரு சொம்பைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''பெரிய சொம்பில் பால் கொண்டு வந்தால் என்ன? இந்தப் பால் எனக்கு எப்படி போதும்?'' என்றான்.

உள்ளே சென்ற அவள் ஒருபடி அளவுள்ள சொம்பைக் கொண்டு வந்து தர, குடித்துப் பார்த்த ராமசாமி மீண்டும் கத்தினான்.

''சர்க்கரையை அள்ளிப் போட்டுக் கொண்டு வந்திருக்கே! இன்னும் கொஞ்சம் பால் கொண்டு வந்து ஊத்து!'' மனைவியும் அப்படியே செய்தாள்.

மறைவாக இருந்து கவனித்த மாதவன், பண்ணையாரிடம் வந்து அனைத்தையும் சொன்னான். அன்று முதல் பண்ணையாரும் தினமும் காலையில் பால், பழம், சர்க்கரை சாப்பிட ஆரம்பித்தார்.

ஆனால், பண்ணையாரின் உடல் நிலை தேறுவதற்குப் பதிலாக மோசமானது. அடிக்கடி ஏதாவது நோய் வந்து கஷ்டப்பட்டார். நகரத்திலிருந்த மருத்துவரிடம் சென்று காண்பித்தார். பண்ணையாரின் உடலை சோதித்த மருத்துவர் கண்டிப்பாக பால், சர்க்கரை போன்றவைகளை அவர் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லி விட்டார்.

பண்ணையாருக்கு ஆச்சரியம்! 'நீண்ட நாட்களாக பாலும் சர்க்கரையும் சாப்பிடும் ராமசாமிக்கு ஒன்றும் ஆகவில்லை. சில நாட்கள் மட்டும் சாப்பிட்ட எனக்கு மட்டும் நோய் வருவானேன்?' ராமசாமியைக் கேட்டார்.


''ஐயா! நான் பால்ன்னு சொன்னது நீராகாரத்தை! சர்க்கரைங்கறது உப்பு, பழம்ன்னா மிளகாய்ப்பழம் கடித்துக் கொண்டு குடித்து விடுவேன். மதியம் கம்பங்கூழோ இல்லாட்டி கேப்பங்கூழோ குடிப்பேன். ராத்திரிக்கு மட்டும் நெல்லுச் சோறு வயிறாக சாப்பிடுவேன். எந் நேரமும் ஏதாவது வேலை செய்து கொண்டு இருப்பதால் எதை சாப்பிட்டாலும் செரித்து விடும். அதனால்தான் என் உடல் நிலை நன்றாக இருக்கிறது'' என்றான்.


உடல் ஆரோக்கியம் என்பது உணவில் மட்டும் இல்லை, உடலுழைப்பிலும் உள்ளது என்பதை உணர்ந்த பண்ணையார், நொறுக்குத் தீனி தின்பதை நிறுத்தினார். தம்மால் முடிந்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார்.

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

குட்டீஸ் கோகுலம்

இரண்டு படங்களுக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள்: 1. வரிக்குதிரையின் வால், 2. பறவைகளின் எண்ணிக்கை, 3. ஒட்டச்சிவிங்கியின் புருவம், 4. ஒட்டச்சிவிங்கியின் பற்கள், 5. சிங்கத்தின் காது

குழந்தைகள் தினம்!

நவம்பர் மாதம் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கும் நாள், **குழந்தைகள் தினம்!** சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியான பண்டிட் ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளான நவம்பர் 14 ஆம் தேதிதான் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது என்பது அனைவருக்கும் தெரியும். இதற்கு முக்கிய காரணம், நேருஜி குழந்தைகள் மீது கொண்டிருந்த அலாதியான



பிரியம்தான்! குழந்தைகள் அவரை 'நேரு மாமா' (இந்தியில் 'சாச்சா நேரு') என்றுதான் குறிப்பிடுவார்கள். 1963ஆம் ஆண்டில் நேருஜியின் மறைவுக்குப் பிறகு, அவரது பிறந்த நாளை குழந்தைகள் தினமாக நாம் கொண்டாடி வருகிறோம். டெல்லியில் இருக்கும் தேசிய குழந்தைகள் மையத்துக்கு, ஜவஹர் பால பவன் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. உலகின் பல்வேறு நாடுகளும் வெவ்வேறு தினங்களில் குழந்தைகள் தினத்தைக் கொண்டாடி வருகின்றன. 1954ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோ அமைப்பு நவம்பர் மாதம் 20ஆம் தேதியை அகில உலக குழந்தைகள் தினமாகக் கொண்டாடி வருகிறது. ஆனால் மற்ற சில நாடுகளின் குழந்தைகள் தினங்கள் இதோ: ஜப்பான்- மார்ச் 3, ஹாங்காங் - ஏப்ரல் 4, மெக்சிகோ- ஏப்ரல் 30, தென் கொரியா - மே 5, நைஜிரியா - மே 27, ஹங்கேரி - மே மாதம் கடைசி ஞாயிற்றுக் கிழமை, சீனா - ஜெர்மனி- செக்கோஸ்லோவேகியா - ஜூன் 1, இந்தோனேஷியா - ஜூன் 23, அர்ஜென்டைனா- சிலி -ஆகஸ்ட் 2ஆம் ஞாயிறு, சிங்கப்பூர்- ஸ்ரீலங்கா - அக்டோபர் 1, இஸ்ரேல் - அக்டோபர் 9, பிரேசில் - அக்டோபர் 12, பெரு - அக்டோபர் - 14.

மனுநீதிச் சோழன் காலத்தில், அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட



தெரிந்துகொள்வோம் : எஸ். சந்திரமௌலி

ஆராய்ச்சி மணியை அடித்தாலே, அவர்களுடைய குறை விசாரிக்கப்பட்டு, நீதி வழங்கப்பட்டது என்று நாம் வரலாற்றில் படித்திருக்கிறோம். ஆனால், இன்று காலம் மாறிவிட்டது. நம் நாட்டில் ஏழை மக்களுக்கு உதவிடும் வகையில் சட்ட சேவை அளிக்க சிறப்பு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தின்படி ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பெண்கள், பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசாங்கமே சட்ட சேவையை அளித்து வருகிறது. இதனை நடைமுறைப்படுத்த சட்ட சேவை ஆணையம் செயல்பட்டு வருகிறது. இது பற்றி பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் நவம்பர் மாதம் ஒன்பதாம் தேதி **சட்ட சேவை தினமாக** கொண்டாடப்பட்டு வருகிறது.


இன்று உலக மக்கள் தொகையில் சுமார் இருபத்து நான்கு கோடி பேர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அடுத்த இருபது வருடங்களில் இது முப்பத்தெட்டு கோடியாக உயரும் என்று சொல்கிறார்கள். இந்த நோய் பெரியவர்களை மட்டுமின்றி, குழந்தைகளையும் விட்டு வைக்கவில்லை. இன்று, உலகில் உள்ள பதினான்கு வயதுக்குக் குறைவான குழந்தைகளில் அறுபது லட்சம் பேருக்கு நீரிழிவு நோய் பாதிப்பு உள்ளது. நீரிழிவு நோயைப் பற்றி மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், அதனை எப்படி சமாளித்து வாழவேண்டும் என்று அறிவுறுத்தவும், உலகம் முழுவதும், ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 14ஆம் தேதி **உலக நீரிழிவு தினம்** அனுசரிக்கப்படுகிறது.

இதர முக்கிய தினங்கள் :

நவம்பர் 17 - உலக காக்கை வலிப்பு தினம்.

நவம்பர் 20 - ஆப்ரிக்க தொழில்மய தினம்.

நவம்பர் 29 - அகில உலக பாலஸ்தீனிய மக்கள் ஆதரவு தினம்.






தலைப்பு : எஸ். பரீத்

அழகாபுரி என்ற அழகே உருவான ஓர் ஊர். பச்சைக் கம்பளம் போர்த்தினது போல, பார்க்கும் இடமெல்லாம் பசுமை. மக்கள் மகிழ்ச்சியால் இருக்க நீதியாட்சி நடத்தும் ராஜா. அவனுடைய அழகு மகன்தான் முஹம்மது அலி! ஆயக்கலை அறுபத்து நான்கும் கற்றவன். எதையும் வீரத்துடன் முடிக்கும் திறமைசாலி. ஒருமுறை ராஜா, முஹம்மது அலியிடம், பல இளவரசர்கள் சென்று திரும்பி வராத ஓர் இடத்தைப் பற்றிக் கூறினார்.

''ஏழு கடல், ஏழு மலை தாண்டிப் போனால் ஒரு குகை வரும். அதில் ஒரு பெரிய அரக்கன் இருப்பான். அவனிடம் ஒரு முத்து உள்ளது. அதை இது வரை கைபற்றியவர் யாருமில்லை'' என்று ராஜா கூறினார்.

இளவரசர் முஹம்மது அலி அங்கு உடனே போக வேண்டும் என ராஜாவிடம் கூறினார். ஆனால் ராஜா அதற்கு மறுத்துவிட்டார். இளவரசரோ



பொன் தேவதை!

யாருக்கும் தெரியாமல் குதிரை மீதேறி சென்றுவிட்டார்.

முஹம்மது அலி ஊர் எல்லையிலுள்ள காட்டுப்பாதை வழியே செல்லும்போது, ஒரு பெரியவர் வந்தார். அவரிடம் முஹம்மது அலி, தான் செல்லும் காரியத்தைப் பற்றிச் சொன்னான்.

அதைக் கேட்ட பெரியவர் ஒரு வேல், ஒரு பூ, சில கற்களைக் கொடுத்தார். ''ஒரு கல்லை எடுத்து கடலில் போட்டால் வழி கிடைக்கும். வேலைக் கொண்டு அரக்கனின் கண்ணில் அடித்தால், அவன் இறப்பான். பூவை வழியில் வரும் சிலைகளின் முகத்தருகே கொண்டு சென்றால் சிலைகள் உயிர் பெறும்'' என்ற இரகசியத்தைக் கூறினார். அனைத்தையும் எடுத்துக்கொண்டு பயணத்தைத் தொடங்கினான் முஹம்மது அலி.

பெரியவர் சொல்படி சென்று குகையை அடைந்தான். அந்த இருட்டுக் குகையில் பிரகாசமாக ஒளி வீசியது ஒரு முத்து. அதுதான் அவன் தேடி வந்தது. அவன் உள்ளே செல்லும்போது குட்டிக் குட்டி அரக்கர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

முஹம்மது அலி தன் வாளை எடுத்து அனைவரையும் வீழ்த்தினான். மேலும் உள்ளே செல்ல, பெரிய மாமிச மலை போன்று தூங்கிக்கொண்டு இருந்தான் அந்த அரக்கன். காலடிச் சத்தம் கேட்டதும் அரக்கன் விழித்துக்கொண்டான். உடனே முஹம்மது அலி ஓடிச்சென்று பெரிய பாறை மீதேறி அரக்கன் மேல் அம்பு எறிந்தான். ஆனால் அரக்கனுக்கு ஒன்றும் ஆகவில்லை. வாளால் அரக்கன் உடலை அறுத்தான். அதுவும் முடியவில்லை! பிறகு பெரியவர் சொன்னது நினைவில் வந்தது. உடனே வேலை எடுத்து அரக்கனின் கண்ணுக்குக் குறி பார்த்து எறிந்தான். சரியாக கண்ணில் பட்டு அரக்கன் இறந்தான்.


அரக்கனைக் கொன்றபின் முத்தை எடுத்துக்கொண்டு, அங்கே இருந்த சிலைகளின் முகத்தருகே பூவைக் கொண்டு சென்றான். உடனே, அந்த இளவரசர்கள் உயிர் பெற்றனர்.


அந்த முத்து மீது சூரிய ஒளி பட்டதும், அதிலிருந்து அழகு தேவதை வந்தாள். அவள் முடி பொன் போன்று இருந்தது. உடல் வெள்ளியைப் போல் ஜொலித்தது. ''என்னை இந்த அரக்கன் சிறைப் பிடித்திருந்தான். உங்களால் விடுதலைப் பெற்றேன். இனி நீங்களே என் கணவர்'' என்றாள். அவளைத் தன் நாட்டிற்கு அழைத்துச் சென்று மணம் முடித்தான் முஹம்மது அலி!

மந்திரக் கதை : எஸ். ஷாஹிதா பேகம்

ஓவியம் : விக்னேஷ்

தலைப்பு : ரா. சச்சின்





சிநேகிதன்



பைபிள் கதை : கே. அலெக்ஸ்
தலைப்பு : கே. அபிஷேக் ராஜா

கடவுளை அதிகமாக நேசித்து, அவரையே நம்பி வாழ்ந்த ஒரு மனிதர் இருந்தார். அவர் பெயர் ஆபிரகாம். அவருடைய மனைவி சாராள். இவர்களுக்கு ஏராளமான ஆடு, மாடு, நிலபுலன்கள், வேலைக்காரர்கள் இருந்தார்கள். ஆனால் குழந்தைகள் இல்லை!

ஒருநாள் ஆபிரகாம் மிக மன வருத்தத்தில் ஆண்டவரிடம் முறையிட்டார். ஆண்டவர் அவரை வீட்டுக்கு வெளியே வரவழைத்து, ''கவலைப்படாதே, வானத்தை அண்ணாந்துப் பார். நட்சத்திரங்களை உன்னால் எண்ண முடியுமா? அதைப் போல் உன் சந்ததியைப் பெருக்குவேன்'' என்று கூறினார்.

அவர் கூறியபோது ஆபிரகாமுக்கு தொன்னூற்று ஒன்பது வயது. அவர் மனைவிக்கு தொன்னூறு வயது. அவர் மனைவி இந்த உரையாடலைக் கேட்டு ஏளனம் செய்தாள்.

''இது எப்படி சாத்தியமாகும்?'' என்று கூறினாள்.

ஆனால் தேவனோ, தாம் சொன்ன வார்த்தையின்படி ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தார். அதற்கு 'ஈசாக்கு' என்று பெயரிட்டார்கள். பிள்ளை வளர்ந்து வந்தான். அச்சமயம் தேவன், ஆபிரகாமை சோதிக்க நினைத்து, ''அந்தப் பிள்ளையை எனக்காகப் பலியிடு'' என்று கூறினார்.

ஆபிரகாமோ தேவனை அதிகம் நம்பினபடியால் அந்தப் பிள்ளையைப் பலியிட தம் கையை உயர்த்தி வெட்டப் போகும் போது, கடவுள் ''பிள்ளையை வெட்டாதே! என் வார்த்தையைக் கேட்டு கீழ்படிந்ததால் உன்னை ஆசீர்வதிப்பேன்!'' என்று கூறி ஆபிரகாமை மேலும் மேலும் ஆசீர்வதித்தார்.

அதனால் ஆபிரகாம் அநேக தேவ மக்களுக்குத் தகப்பனாகவும் தேவனுக்கு சிநேகிதனாகவும் போற்றப்படுகின்றார்.



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல்,

சென்னை - 600 032

என் பெயர் தென்றல்

''தாத்தா'' என்று குரல் வந்தது.

சட்டென்று திரும்பினாள் தென்றல். முகம் முழுவதும் மலர்ச்சியுடன் நின்றிருந்தார் தாத்தா. ஓடிச்சென்று அவரைக் கட்டியணைத்துக் கொண்டாள் தென்றல்.

''தாத்தா என்னை மன்னிச்சுடுங்க. தெரியாமப் பண்ணிடேன்.''

தாத்தா பதில் ஏதும் பேசவில்லை. மெல்லிய புன்னகையைச் சிந்தினார்.

''ஆனந்தி எங்கே தாத்தா?''

''இதோ'' என்று முன்னால் குதித்து வந்தாள் ஆனந்தி.

தாத்தாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்து, ஓடிச்சென்று ஆனந்தியை கட்டிக் கொண்டாள் தென்றல்.

''இரண்டு பேரும் மேலே வாங்க'' என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்றாள் ஆனந்தி. தாத்தாவும் தென்றலும் அவளைப் பின்தொடர்ந்து சென்றனர். அது மொட்டை மாடி. ஓரத்தில் வசையாக பூந்தொட்டிகள்.

''ஆனந்தி; தாத்தாவை ஏன் இங்கே கூட்டி வந்தே?'' என்றாள் தென்றல்.

தென்றல் அவளை உட்கார வைத்து எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள். அவள் சென்னையிலேயே இருக்கப் போவதைப் பற்றி... பள்ளியில் சேர்ந்து படிக்கப் போவதைப் பற்றி...

''அப்ப, தாத்தா?''

''எனக்கென்னமா? நான் திரும்பவும் காட்டுக்குப் போயிடறேன். என்னால இங்கே இருக்க முடியாது'' என்றான்.

''நான் தாத்தாவை விட்டு எங்கேயும் வரமாட்டேன்'' என்றாள் தென்றல்.

''சரி அதை அப்புறம் பார்த்துக் கலாம். முதல்ல அப்பா, அம்மாகிட்ட பேசணும்'' என்றாள் ஆனந்தி.

''நான்தான் உனக்குப் பதிலா இங்கே இருந்தேன்னு சொன்னா அம்மா என்னை கோவிச்சுப்பாங்களே.''

ஆனந்திக்கு திடீரென்று அந்த யோசனை தோன்றியது.

''ம், ஐடியா! நீயும் தாத்தாவும் நைஸா இப்ப வெளியில் போயிடுங்க. நான் பழைய ஆனந்தியா வீட்டுக்குள்ள நுழைஞ்சிடறேன். கொஞ்ச நேரம்





கழிச்சு நீயும் தாத்தாவும் வாங்க. அப்பாகிட்ட பேசலாம். கேட்டா நீ என் ஃப்ரெண்ட்டுன்னு சொல்லிடறேன்.''

தாத்தாவுக்கும் அது சரியான யோசனையாகவே பட்டது.

மூன்று பேரும் சத்தம் போடாமல் மாடியைவிட்டு கீழே இறங்கினார்கள். தென்றலும் தாத்தாவும் திறந்திருந்த கேட் வழியாக வாசலுக்குப் போனார்கள். ஆனந்தி வழக்கம் போல் உள்ளே போனாள்.

''ஆனந்தி எங்கே போயிட்டே? உன்னைத்தான் ரொம்ப நேரம் தேடிக் கிட்டிருக்கேன்'' என்றபடி, அடுப்பறை யிலிருந்து வெளியில் வந்தாள் அம்மா. ஆனந்தி ஓடிச்சென்று அம்மாவைக் கட்டிக்கொண்டாள்.

அவருக்குப் புரியவில்லை. ''என் னடி, புதுசா பார்க்கிற மாதிரி ஓடி வந்து கட்டிக்கிறே? போ முதல்ல பல்லை தேய்ச்சிட்டு வா. டீ தரேன்.''



இரண்டே நிமிடங்களில் பாத்ரூமி லிருந்து வெளியில் வந்தாள் ஆனந்தி. நேராக, பெட்ரூமுக்குள் நுழைந்தாள். அப்பா இன்னமும் தூங்கிக்கொண்டிருந் தார். ஓடிச்சென்று அவர் நெற்றியில் முத்தமிட்டாள். 'என்னை மன்னிச்சுடுங்க அப்பா!'

அப்பா விழித்துக்கொண்டார். ஆனந் தியைப் பார்த்து மெலிதாக புன்னகை செய்தார்.

''அப்பா, சீக்கிரம் எழுந்திருங்க. உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ்.''

அப்பா எழுந்து ஹாலுக்கு வந்தார். அம்மாவும் அங்கேதான் இருந்தார். ''அப்பா, அம்மா, இரண்டு பேரும் இங்கேயே இருங்க. உங்களுக்கு ஒரு அதிசயத்தைக் காட்டப் போறேன்.''

'ஐயா' என்று வாசலில் ஒரு குரல் ஆனந்தி வாசலுக்குச் சென்று அழைக்க, முதலில் உள்ளே வந்தவர் தாத்தாதான்.

ஆனந்தி அவரை அப்பாவிடம் அறிமுகம் செய்தாள். ''அப்பா, இவர் என் ஃப்ரெண்ட் தென்றலோட தாத்தா. இவர் ஒரு காட்டுல...''

அதற்கு மேல் அவளைப் பேசவிட வில்லை அப்பா. நேராகச் சென்று தாத்தாவின் கையைப் பிடித்து ''வாங்க! வாங்க! எப்படி இருக்கீங்க?'' என்றபடி உட்கார வைத்தார். ஆனந்திக்குக் குழப் பம்! அப்பாவுக்கு இவரை ஏற்கெனவே தெரியுமா?

தாத்தாவின் முகம் முழுவதும் மலர்ச்சி. ''ஆனந்தி, நல்ல வேலை செஞ்சேம்மா. நான் தேடிக்கிட்டிருந்தது இவரைத்தான்.''

12

தொடர்கதை	**மருதன்**
ஓவியம்	**லலிதா**
தலைப்பு	**எம். மகேஷ்**

'ஓ. அந்த வனத்துறை அதிகாரி என் அப்பாதானா?' ஆனந்திக்கு ஒரே குஷியாகிவிட்டது. அப்பா, தாத்தாவைப் பார்த்துக் கேட்டார்.

''தென்றல் எங்கே? அழைச்சுட்டு வந்திருக்கீங்களா?''

''இதோ வாசல்லதான் நிக்கறா'' என்றபடி தலையைத் திருப்பி குரல் கொடுத்தார் தாத்தா. ''தென்றல், இங்கே வாம்மா.''

தயங்கித் தயங்கி உள்ளே அடி எடுத்து வைத்தாள் தென்றல்.

அப்பாவும் அம்மாவும் துள்ளிக் குதித்து எழுந்து விட்டார்கள். இருவர் முகத்திலும் அப்பட்டமான வியப்பு! அம்மா ஓடிச்சென்று தென்றலை நெருங்கினாள்.

''இதென்னங்க அதிசயம்! அச்சு அசல் நம்ம ஆனந்தி மாதிரியே இருக்காளே!''

அப்பா தென்றலை நெருங்கினார். ''தென்றல், உனக்கும் ஆச்சரியமா இருக்கு இல்லையா? இவ என் பொண்ணு ஆனந்தி. எங்கே ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்து நில்லுங்க பார்ப்போம்.''

ஆனந்தி புன்னகை செய்தபடி தென்றலை நெருங்கி, அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

அப்பாவும் அம்மாவும் வைத்த கண் வாங்காமல் இருவரையும் ரசிக்க ஆரம்பித்தனர்.

''இப்படி ஒரு காட்சியை நான் இதுவரை பார்த்ததேயில்லை'' என்றார் அப்பா.

அவர்கள் சகஜ நிலைக்குத் திரும்ப வெகு நேரம் ஆனது. அப்பா, தாத்தாவைப் பற்றியும், தென்றலைப் பற்றியும் முன்னரே அம்மாவிடம் தெரிவித்திருந்தார். அடுத்து என்ன செய்வது என்பது பற்றி இருவரும் தாத்தாவிடம் பேச ஆரம்பித்தனர்.

அப்பா ஆனந்தியிடம் திரும்பினார். ''ஆனந்தி, தென்றலை அழைச்சுட்டுப் போய் வீட்டை காட்டு. அவகிட்ட பேசிட்டிரு.''

ஓட்டமும் நடையுமாக இருவரும் மாடிக்குப் போனார்கள்.

''இப்படியெல்லாம் ஆகும்னு நான் கனவுல கூட நினைக்கலே ஆனந்தி'' என்றாள் தென்றல். ''நான் பாட்டுக்குக் காட்டுல இருந்தேன். எங்கிருந்தோ திடீர்னு நீ வந்தே. நாம இரண்டு பேரும் இடம் மாறினோம். இப்ப எல்லாமே மாறிப்போச்சு.''

''உன்னோடயும் தாத்தாவோடயும் இருந்ததை என்னால மறக்கவே முடி



''ஆனந்தி படிக்கிற ஸ்கூல்லயே இனி நீயும் படிக்கலாம். ரெண்டு பேரும் ஒண்ணா போகலாம், வரலாம்!''

யாது தென்றல். ரொம்ப அமைதியா, ரொம்ப அழகா இருந்துச்சு. இனி நான் ஜாலியா ஸ்கூலுக்குப் போவேன்.''

அப்பா அவர்களைத் தேடி மேலே வந்தார்.

''தென்றல், இனி நீ இங்கேதான் இருக்கப்போறே. இனி நான்தான் உனக்கு அப்பா.''

தென்றலின் கண்கள் கலங்கின.

அப்பா அவளை அணைத்துக் கொண்டார். ''ஆனந்தி படிக்கிற ஸ்கூல் லயே இனி நீயும் படிக்கலாம். ரெண்டு பேரும் ஒண்ணா போகலாம், வரலாம்.''

இருவரும் மாடியிலிருந்து கீழே இறங்கினார்கள். 'தாத்தா எங்கே?' திக்கென்றது தென்றலுக்கு. அவள் தவிப்பை உணர்ந்து கொண்ட அம்மா, அவள் தலைமுடியைக் கோதி விட் டாள்.

''தாத்தா அடிக்கடி வந்து பார்க்க றேன்னு சொன்னார் தென்றல். நீ கவலைப்படாதே! உன்கிட்ட நேர்ல சொல்லிட்டுப் போகிற அளவுக்கு அவர்கிட்ட தெம்பு இல்லை. கிளம் பிட்டாரு.''

தென்றல் விசும்பி அழ ஆரம்பித் தாள். ஆனந்தி அவளை ஆறுதலுடன் கட்டியணைத்துக் கொண்டாள்.

'லொள் லொள்' என்றபடி எங் கிருந்தோ பாய்ந்து வந்தது டிங்கு. ஆனந்தியைப் பார்த்தது. பிறகு, தென் றலை. அறையைச் சுற்றிச் சுற்றி வந் தது. பிறகு, மீண்டும் இருவரையும் பார்த்தது. 'லொள், லொள்' என்று செல்லமாகக் குரைத்தது.

தென்றல் தன் அழுகையை நிறுத்தி விட்டு, டிங்குவை தூக்கி கன்னத் துடன் கன்னமாக அணைத்துக்கொண் டாள்.

(முற்றும்)



வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 3ல் கலந்துகொண்டு அசத்திய குட்டீஸ்களில் சரியான விடையெழுதியவர்களில் பத்து பேர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கு தலா ரூ 100/- வீதம் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள்:

1. வியாழன் என்னும் கோளின் நிலா
2. மர்யா ஸ்க்லோடோவஸ்கா
3. சிறுத்தைக்குட்டி
4. 1956
5. கண் பார்வையற்ற ஒருவருக்குத் தினமும் செய்தித்தாளை வாசித்தார்.

பரிசு பெறுவோர்:

1. **என்.லோகேஷ்வர், புதுச்சேரி**
2. **டி.நான்சி செவனா, மதுரை**
3. **சி.விஜய பிரசன்னா, வேலூர்**
4. **மு.சோமேஷ்வர், கோவை**
5. **எம்.வி.சுவாதி, மைசூர்**
6. **ர.கஜேந்திரகுமார், ஆத்தூர்**
7. **ச.ஸ்வேதா, திருச்சி**
8. **டி.சிவா, அகஸ்தீஸ்வரம்**
9. **ர.மீனாட்சி, சென்னை**
10. **ஆர்.ஜி.கல்யாணி, திசையன்விளை**

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்;
கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!



அரசர் ஒருவர் படையோடு
அருகில் இருந்த காட்டுக்கு
வேட்டை யாடும் எண்ணத்தில்
வேக மாகப் போனாரே!


போன மன்னர் வழிதவறித்
தனித்துக் காட்டில் தடுமாறி
இங்கும் அங்கும் தேடியுமே
எங்கும் வழியைக் காணவில்லை!



காணும் தூரம் வரைஎங்கும்
காண வில்லை உடன்வந்தோர்!
இரவு நேரம் பசிவேறு
என்ன செய்வது
தெரியவில்லை!

தெரியா இடத்தில் இப்படி நாம்
வந்து மாட்டிக் கொண்டோமே!
பசியும் வேறு எடுக்கிறதே
என்று குழம்பித் தவித்தாராம்!

தவித்த மன்னன் கண்களிலே
தட்டுப்பட்டது ஒரு குடிசை
அந்த குடிசைக் கதவினையே
அரசர் தட்டிக் காத்திருந்தார்.



தலைப்பு : ஏ.எஸ்.சக்தி அஸ்வின்

கவிதைக் கதை : வளர்கவி



ஓவியம்: பிள்ளை

கதவு திறந்தவன் கண்ணுற்றான்
கானத்தில் வாழும் வேடன் அவன்!
உள்ளே அழைத்து உண்பதற்குத்
தினைமா தேனும் கொடுத்தானாம்!

குளிரும் மழையும் சேர்ந்துவர
''படுத்துக் கொள்வீர் குடிசைக்குள்''
என்று மன்னரைப் படுக்க வைத்தே
வாசலில் படுத்துக் கொண்டானாம்!

அடித்த மழையில் கடுங்குளிரில்
அந்த வேடன் இறந்துவிட்டான்!
வேந்தர் கதறி இடர்பட்டார்!
வேதனை யாலே துன்புற்றார்!

அரசன் துயரைத் தீர்ப்பதற்கு
அன்பு கொண்ட ஒருசாது
அருகில் இருந்த ஊருக்கு
அழைத்துச் சென்றார் மன்னவரை!

மன்னர் அங்கோர் வீட்டினிலே
மழலை யொன்று கட்டியிலே
தவழக் கண்டார் அதனருகில்
அமர்ந்து இருந்தார் அதன் தாயார்!

''யார்நீ முந்தைப் பிறப்பினிலே?''
என்று சாது கேட்டதற்கு
''இறந்த வேடன் நான்தானே?''
என்றே சொன்னது குழந்தையுமே!

''ஏழை என்ற போதிலும்நான்
இரவுப் பசியைப் போக்கியதால்
இறந்தும் பேறு பெற்றேனே!''
என்றே தொடர்ந்து விளிம்பியதே!

அழியாப் புகழை அடைவதற்கு
அன்பு கொண்டு உயிர்களுக்கு
என்றும் உதவி செய்வோமே!
இறைவன் மகிழ வாழ்வோமே!!



ஒரு பக்கக் கதை : கோ. கதிரவன் ★ படம் : விக்னேஷ் ★ தலைப்பு : முத்துநகை



வேகம்!

"பென்சில், பேனா, புக்ஸ் எல்லாத்தையும் சரிப் பார்த்து எடுத்து வைத்துக் கொண்டாயா?" என்றாள் அம்மா.

"ம். எடுத்துக்கிட்டேம்மா."

பள்ளிக்கு கிளம்பும் அவசரத்தில் ஷாக்ஸ், ஷூ போட்டுக்கொண்டே பதிலளித்தாள் ஹரிணி.

இரவு நெடுநேரம் டி.வி. பார்க்க வேண்டியது. காலையில் தாமதமாக எழுந்து, வேகமாக சைக்கிள் ஓட்டிக் கொண்டு, கடைசி மணியடிக்கும்போது பள்ளிக்குச் செல்வது. பலமுறை தாய், தந்தை சொல்லியும் கேட்பதில்லை.

ஆனால், படிப்பில் படு சுட்டி. எல்லா பாடத்திலும் முதல் மதிப்பெண்தான், விளையாட்டிலும் கூட!

"மக்குங்கதான் தினமும் விழுந்து விழுந்து படிப்பாங்க. அதே மாதிரி பயந்தாங்கொள்ளிங்கதான் மெதுவா போவாங்க. நான் திறமைசாலி, சாமர்த்தியக்காரி. எவ்வளவு வேகமா போனாலும் சரியா போயிடுவேன்" என்பாள் ஹரிணி.



இன்று அரையாண்டுத் தேர்வு ஆரம்பம். இன்றும் அவசர அவசரமாக சாப்பிட்டுவிட்டு, சைக்கிளில் வேகமாக கிளம்பும்போது... "அம்மா போய்ட்டு வரேம்மா" என்றாள்.

"பார்த்து மெதுவா போ" என்று கத்தினாள் அம்மா.

"சரிம்மா" என்றாளே தவிர, வழக்கம் போல வேகவேகமாக சென்றாள்.

சிறிது தூரத்தில் ஸ்கூட்டர் ஒன்று குறுக்கிட... பிரேக் போட.... ஸ்கூட்டர் சைக்கிளில் மோத...

"அம்மா" என்ற அலறலுடன் கீழே விழுந்தாள்.

மருத்துவமனை! கால் எலும்பு முறிவு.

ஒரு மாதத்துக்கு பெட் ரெஸ்ட், தேர்வுக்கு செல்ல முடியாத நிலை!

"பார்த்தியா ஹரிணி. உன்னோட திறமையும் சாமர்த்தியமும் ஒரு நொடியில் முடங்கிப் போச்சு. வேகம் எப்பவும் வெற்றியைத் தராது. பொறுமைதான் நிரந்தர வெற்றியைத் தரும்" என்றார் அப்பா.

"ஸாரி டாடி, ஸாரி மம்மி. இனிமே சைக்கிள்ல மட்டுமில்ல, வாழ்க்கையின் எல்லா விஷயத்திலும் விவேகமாவும் ஜாக்கிரதையாகவும் செல்வேன்." என்று உறுதியுடனும், தெளிவுடனும் சொன்னாள். ○

"பயந்தாங்கொள்ளிங்கதான் மெதுவா போவாங்க. நான் திறமைசாலி"

கதை : ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ் ✱ தமிழ் வடிவம் : ராதிகா ரகு ✱ தலைப்பு : எஸ். தாரிணி




அப்படியா பீர்பால்?
மாட்டிவிட திட்டமா? ஒரு கை பார்ப்போம்.
ஆமாம் மன்னா! நான் ஒரு மருந்தைக் கண்டு பிடித்துள் ளேன்.
தாங்கள் அனுமதித்தால் நாளை அந்த வித்தையை தங்கள் முன் காட்டுகிறேன்.
ஓஹோ...
சரி!ஆனால் இது பொய்யாக இருந்தால் தங்கள் தலை தரையில் உருளும்.
மறுநாள் வித்தையைக் காண பலர் ஆவலுடன் கூடினர்.
இப்பொழுது அரசருடைய குதிரையை ஒரு கணம் மறைய வைக்கப் போகிறேன்.


யானைப் பாகன் தயாராக இல்லையென்றால் எனது திட்டம் அவ்வளவுதான்! இது தண்ணீரென தெரிந்துவிடும்.
பீர்பால் குதிரை மேல் தண்ணீரை ஊற்றினார்.
குதிரை இப்பொழுது மறையப் போகிறது.
திடீரென...
என்ன ஆயிற்று?
மதம் பிடித்த யானை...
ஓடுங்கள்! ஓடுங்கள்!
யானைப் பாகன் வந்து யானையை அடக்கினான்.
நல்லவேளை!
சரி பீர்பால், உன் வித்தையைத் தொடர்!
அதுதான் முடிந்து விட்டதே மன்னா!


என்ன?
ஆம் மன்னா! இதுவரை குதிரையை மறைத்து வைத்திருந்தேன்.
யாராவது குதிரையைப் பார்த்தார்களா என்று கேளுங்கள்?
ஆமாம்! ஆமாம்!
யானை இப்படி ஓடுகையில் குதிரையை யார் கவனிப்பார்கள்?
ஹா...ஹா... மன்னா யாருமே குதிரையை கவனிக்கவில்லை. அப்படியெனில் என் முயற்சி வெற்றியே!
மன்னர் பீர்பாலின் சாமர்த்தியத்தைப் புரிந்துக் கொண்டார்.
ஆஹா... பீர்பால் மறுபடியும் நீயே வெற்றி பெற்றாய்!
சே!
முற்றும்

''இந்தக் கோழி ஜெய்ஹிந்த்னு கத்தும்னு எப்படிச் சொல்றே?''

இதுதான் 'நாட்டுக் கோழி' ஆச்சே!

– வீரணம் சரவணன்





''சாதாரண காய்ச்சல்னு போன எனக்கு அந்த டாக்டர் ஆபரேசன் பண்ணிட்டார்''

''ஏன்?''

''அவர் கொடுத்த தர்மா மீட்டரை விழுங்கிட்டேன்!''

– அ.பேச்சியப்பன்

கிருஷ்ணர் கடிதம்!



''குசேலருக்கு கிருஷ்ணர் எப்படி கடிதம் எழுதுவார்?''

''தெரியலையே''

''நலம், நலமறிய அவல்!''

– எம்.ஏ.கண்ணன்



''கடைக்குப் போகும்போது எப்பவும் என்னையும் கூப்பிடுவே, இப்ப ஏண்டா என்னைக் கூப்பிடாம போறே?''

''அம்மா 'தனியா' வாங்கிட்டு வரச் சொன்னாங்கடா.''

– மா.கண்ணன்







ம. மனிஷா மணிமாறன்

ஆறாம் வகுப்பு,
பாலகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
வடக்கன்குளம்.





எஸ். சிவலிங்கம்

ஆறாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
காடுவெட்டி.





எஸ். அனுசத்யா

பத்தாம் வகுப்பு,
கேந்திரிய வித்யாலயா,
ஆவடி.

சாமியோ சாமி!

உங்கள் கைவண்ணம்!







டி. நந்தகோபால்


நான்காம் வகுப்பு
கே.வி.என். வேதாத்ரி மெட்ரிக்குலேஷன் பள்ளி,
சென்னை.





வி. லாவண்யா

ஆறாம் வகுப்பு,
எஸ்.பி.ஐ.ஓ.ஏ. மெட்ரிக் பள்ளி,
திருச்சி.





நா. ஜனார்த்தனம்,

பத்தாம் வகுப்பு,
காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்.

டியர் சில்ட்ரன்! இந்த அறிவுப் பூங்கா பகுதி மூலமா கடந்த இதழ்களில் மலைகளையும் காடுகளையும் பார்த்தோம். அடுத்ததா கடலுக்குள்ளே குதிக்கலாம் வாங்க!

இன்னைக்கு நாம பசிபிக் பெருங்கடல் பற்றி நிறைய விஷயம் தெரிஞ்சுக்கப் போறோம். சமையல்காரன் தீவு, கோடு தீவு, பேக்கர் தீவு போன்று சுமார் இருபதாயிரத்திலிருந்து முப்பதாயிரம் தீவுகள் பசிபிக் பெருங்கடலில் இருக்கிறதாம்!

'பசிபிக் பெருங்கடல்'ன்னு பேரு வைத்தவர் **'பெர்டினான்ட் மெகல்லன்'** இலத்தீன் மொழியில் 'மாரே பசிபியம்' **(mare pacifum)** என்றால் 'அமைதியான கடல்' என்று பொருள். பூமியின் நீர்ப் பரப்பில் 46 சதவீதம் இடம் பெற்றிருப்பது பசிபிக் பெருங்கடல்தான். கடலின் பரப்பளவு 169.2 மில்லியன் சதுர கிலோமீட்டர்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதிலேயே மிக ஆழமான பகுதி (சேலஞ்சர்ஸ் டீப்) நம்ம பசிபிக் பெருங்கடல்லதான் இருக்கு. அதனுடைய ஆழம் 35,798.6 அடிகள். 'மெரியானா டிரன்ச்' பகுதியில் 'சேலஞ்சர்' என்கிற கப்பல் மூலமாகப் போய் கடலின் ஆழத்தைக் கண்டுபிடிச்சதால், அந்த இடத்துக்கு 'சேலஞ்சர் டீப்'ன்னு பேரு வந்திருக்கு.

அடுத்து, 'பசிபிக் நெருப்பு வளையம்!' கடலைச் சுற்றி நெருப்பு வளையமான்னு ஆச்சரியப்படறீங்களா? பசிபிக் பெருங்கடலைச் சுற்றியுள்ள தீவுகளில் நூற்றுக்கணக்கான எரிமலைகள் இருப்பதால், இந்தப் பகுதிகளை பசிபிக் நெருப்பு வளையம்னு அழைக்கிறாங்க. உலகில் உள்ள எரிமலைகளில் மொத்தம் 75% பசிபிக் பகுதியில்தான் இருக்காம்.

பசிபிக் பெருங்கடல் ஏறக்குறைய முக்கோண வடிவத்தில் இருக்கு. வடக்கு ஆர்டிக் பகுதியில் குறுகலாகவும், தெற்கு ஆர்டிக் பகுதியில் அகலமாகவும் உள்ளது. மேற்குப் பகுதியில் ஆசியா, ஆஸ்திரேலியாவைத் தொடுது. கிழக்கில் அமெரிக்கா!

பசிபிக் பெருங்கடலில் முதலில் பயணம் மேற்கொண்ட ஐரோப்பிய மாலுமி **'பால்போ'**. இவர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்.

பசிபிக் பெருங்கடலில் பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றன. பல்வேறு மீன் வகைகளான சால்மன்,





அறிவுப் பூங்கா

முனைவர் ஆசுரா

தலைப்பு

கே. அம்சவர்ஷிணி

ஹாலிபுட், ஹெரிங், சர்டின்ஸ், துனா, சுறா போன்றவை காணப்படுகின்றன.

ஆழ்கடலின் அடிப்பகுதியில் வாழவே முடியாது எனக் கருதப்பட்ட இடங்களிலும் 'போகனாபோரோ புழுக்கள்' வாழ்கின்றன.

பசிபிக் பெருங்கடலில் இருக்கின்ற இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை. 'மாசுபடுதல்' மற்றும் சுற்றுலாப் பயணிகளின் அதிகமான வருகையால் பவளப் பாறைகள் பாதிக்கப்படுகின்றன. எண்ணெய் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளால் ஆமை போன்றவைகள் அழிந்து வரும் நிலையில் உள்ளன. திமிங்கிலம், கடல் ஓட்டர் மனிதர்களால் வேட்டையாடப்படுகின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் நடத்துகின்ற அணு ஆயுதப் பரிசோதனைகளாலும் பசிபிக் பெருங்கடல் பாதிக்கப்படுகின்றது.

அமெரிக்கா - ஜப்பான் வாணிப வழியாகவும், ஆசியா, ஆஸ்திரேலியா போன்ற கண்டங்களின் வாணிப வழியாகவும் பசிபிக் பெருங்கடல் பயன்படுகிறது. பசிபிக் பெருங்கடல் பகுதியின் நிலவளம் பிரமிக்கத்தக்கதாக உள்ளது. அலாஸ்கா, கலிபோர்னியா, சீனா போன்ற இடங்களில் எண்ணெய் வயல்கள் உள்ளன. காற்றாலை மூலம் பசிபிக் தீவுகளுக்கு மின்சாரம் கிடைக்கின்றது. 'முத்துக் குளித்தல்' நடைபெறுகிறது.

பசிபிக் பெருங்கடலில் 'நீர்ச்சறுக்கு' விளையாட்டு நடைபெறுகிறது. வாங்க நாமும் விளையாடிட்டுப் போவோம். ரெடி...ஸ்டார்ட்...!



வரும் பசிபிக்





சிவப்புத் துணியிலே மேல்சட்டை நீலத் துணியிலே கால் சட்டை, பச்சைத் துணியிலே குல்லா - இப்படி வண்ண வண்ண உடையுடன் காட்சியளித்த அந்தக் குரங்கு, கோவிந்தசாமி சொன்ன படியெல்லாம் செய்யும்.

கோலை நீட்டினால் தாவும்; குட்டிக் கரணம் போடும், மாடு மேய்ப்பவரைப் போலப் பிடரியிலே கோலை வைத்துக்கொண்டு நிற்கும். தாத்தா மாதிரி தடியை ஊன்றித் தள்ளாடித் தள்ளாடி நடக்கும். பெரியவர்கள் சின்னவர்கள் எல்லோரும் சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

வித்தை முடியப் போகிற சமயம், ''ரங்கா, சுத்தி நிற்கிற புண்ணியவான்களெல்லாம் உன் வித்தையைப் பார்த்துட்டுச் சும்மா போக மாட்டாங்க. தாராளமாகக் காசு கொடுப்பாங்க. அவங்க தர்றததை சலாம் போட்டு வாங்குடா ரங்கா'' என்பார் கோவிந்தசாமி.

உடனே ரங்கன் தகரக் குவளையை எடுத்துக்கிட்டு, சலாம் போட்டபடி சுற்றிச் சுற்றி வரும். 'ஆஹா! ஓஹோ!' என்று வேடிக்கை பார்த்தவர்களில் பலர், மெல்ல நழுவி விடுவார்கள். சில பேர் தான் காசு போடுவார்கள். அதுவும் பெரும்பாலும் ஐந்து பைசாவாகத்தான் இருக்கும்.

ஒரு நாளைக்குக் குவளையிலே விழுகிற சில்லறைகளையெல்லாம் சேர்த்து எண்ணிப் பார்த்தால், இரண்டு ரூபாய், மூன்று ரூபாய்தான் இருக்கும் ஒவ்வொரு நாளும் எவ்வளவு பணம்





கிடைக்குமோ, அதிலே சரி பாதிக்குப் பொரி, கடலை, தேங்காய்க் கீற்று, வாழைப்பழம் - இப்படி ரங்கனுக்குப் பிடித்ததாகப் பார்த்து வாங்கிக் கொடுத் திடுவார் கோவிந்தசாமி. இன்னொரு பாதிப் பணத்திலே அவருக்குத் தேவை யான சோறு, பலகாரம், டீ, வெற்றிலை பாக்கு வாங்கிக் கொள்வார். தமக் கென்று அதிகமாக எடுத்துக் கொள் ளவே மாட்டார்!

ரங்கனை அவர் சொந்தப் பிள்ளை மாதிரியே வளர்த்து வந் தார். சில சமயம் அதை இடுப்பிலே தூக்கி வைத்துக்கொண்டு, ''ரங்கா, இந்த வயசான காலத்திலே எனக்கு யாரு இருக்கிறாங்க? நீதான் நான் பெத்த பிள்ளை மாதிரி சம்பாதிச்சு என்னைக் காப்பாத்தறாய்'' என்று பாசத்தோடு கூறுவார்.

ரங்கனுக்கும் கோவிந்தசாமியிடத் திலே மிகுந்த பிரியம்தான். ஆனாலும் நடுநடுவே அதற்கு ஓர் ஆசை வந்து விடும்!

தினமும் கடை வீதி வழியாகப் போகும் போது அங்கே கடைகளில் குவியல் குவியலாக இருக்கிற பொரி, பட் டாணிக் கடலை, பொட்டுக் கடலை, வேர்க்கடலை, தேங்காய், சீப்புச் சீப் பாகத் தொங்குகிற வாழைப் பழங்கள் முதலியவற்றையெல்லாம் பார்க்கும். உடனே நாக்கிலே எச்சில் ஊறும்.''

திரும்பி வந்த குரங்கு



'சே, என்ன பொழைப்பு? நான் தினமும்தான் வித்தை செய்கிறேன். குவளை நிறையக் காசு விழுந்தாலும் நான் ஆசைப்படுகிற பொருளை நினைச்ச நேரத்திலே நினைச்ச அளவு தின்ன முடிகிறதா? இவருகிட்டே இருக் கிறவரை இப்படியே இருக்க வேண் டியதுதான். இஷ்டம் போலச் சாப்பிட முடியாது' என்று அடிக்கடி நினைக்கும்.

அன்று அமாவாசை, நல்ல இருட்டு. கோவிந்தசாமி, பிள்ளையார்

கோயில் மண்டபத்திலே குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். பக்கத்திலே படுத்திருந்த ரங்கனுக்குத் தூக்கம் வரவில்லை. மெதுவாக இடத்தை விட்டு எழுந்தது. சந்தடியில்லாமல் காலை எட்டிப் போட்டது. கொஞ்ச



தூரம் போனதும், குடுகுடு என்று ஓட்டம் பிடித்தது. அந்த ஊரை விட்டே ஓடிவிட்டது!

நடுவிலே இருந்த சின்னச் சின்ன ஊர்களைத் தாண்டி ஒரு நகரத்துக்கு வந்தது. அப்போது விடிந்து விட்டது. காலையிலேயே வெயில் மிகக் கடுமையாக இருந்ததால், கால் சட்டைப் பைக்குள்ளிருந்த குல்லாயை எடுத்துத் தலையிலே மாட்டிக் கொண்டது ரங்கன்.

நகரத்துக்குள்ளே நுழைகிறபோது, அங்கே ஒரு பெரிய மாமரம் இருந்தது. அதிலே காய்களும், பழங்களும் ஏராளமாகத் தொங்கின. அத்துடன், அந்த மரத்திலே ஏழெட்டுக் குரங்குகள், குட்டிகளோடு இருந்தன. உடனே ரங்கனுக்குக் குஷி பிறந்துவிட்டது.

ஒரே தாவாகத் தாவி, அந்த மரத்திலே ஏறியது. சட்டையும் குல்லாயுமாக வந்த ரங்கனைக் கண்டதும் அதை யாரோ என்று நினைத்துவிட்டன அந்தக் குரங்குகள். 'உர்...உர்...உர்...' என்று கத்தி, அதை அடித்து விரட்டி விட்டன.

'நானும் குரங்கு. அதுகளும் குரங்குகள். என்னைப் பார்த்ததும் ஏன் இப்படிக் கத்தணும்? ஓட ஓட விரட்டணும்...? ஓ! புரியுது, புரியுது. என் உடையைப் பார்த்துத்தான் விரட்டியிருக்கணும்' என்று நினைத்தது. உடனே, குல்லா, மேல் சட்டை, கால் சட்டை எல்லாவற்றையும் கழற்றி அங்கேயிருந்த ஒரு கால்வாயிலே தூக்கி எறிந்தது. ''இந்த உடுப்பும் வேண்டாம். நம்ம குரங்கு இனமும் வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு ஊருக்குள்ளே ஓடியது.


வழியிலே ஒரு கடைவீதி இருந்தது. அங்கே ஒரு பொரி கடலைக் கடை இருந்தது. கடையிலே யாருமே இல்லை. போன வேகத்திலே, அந்தக் கடைக்குள்ளே புகுந்தது. அங்கே கோபுரம் போல், கொட்டி வைத்திருந்த பொரியை இரண்டு கைகளாலும் அள்ளி வாயிலே திணிக்கப் பார்த்தது. அப்போது, சற்றுத் தூரத்திலிருந்த குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த கடைக்காரர் பார்த்துவிட்டார். சும்மா இருப்பாரா? ''பிடி பிடி!'' என்று கத்திக் கொண்டே கடையை நோக்கிப் பாய்ந்

"நானும் குரங்கு, அதுகளும் குரங்குகள். என்னைப் பார்த்ததும் ஏன் இப்படிக் கத்தணும்? ஓட ஓட விரட்டணும்?"

தோடி வந்தார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. பொரியைக் கீழே எறிந்துவிட்டு ரங்கன் தலை தெறிக்க ஓடியது. கடைக்காரர் அப்போதும் சும்மா இருக்கவில்லை. தெருவிலே கிடந்த ஒரு கல்லை எடுத்துக்

தொடர்ச்சி 45 ஆம் பக்கம்

டோக்கா எபிசு!



ஜப்பானில் நடைபெறும் பிரமாண்டமான திருவிழா இது. ஜனவரி பத்தாம் தேதியில் இதைக் கொண்டாடுகிறார்கள். 'எபிசு' என்பது ஜப்பானியர்களின் செல்வக் கடவுள். தங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்க வேண்டுமென்று அன்று இந்தக் கடவுளை வேண்டிக் கொள்வர். பல வண்ணப் பல்லக்குகள் அன்று இவரது கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்து வரப்படும். அன்று சின்ன மூங்கில் தடி ஒன்றை வாங்கினால் அதிர்ஷ்டம் என எண்ணுவதால், இதுபோன்ற தடிகள் அன்று அதிக அளவில் விற்பனையாகும்.

16

மினி
கோகுலம்





பண்டிகையோ பண்டிகை!

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

1

15

ஜூரிச் திருவிழா!






சுவிட்சர்லாந்தில் ஜூன் 17 அன்று நடைபெறும் இசைத் திருவிழா. மூன்று நாட்களுக்கு தொடர்ந்து இசை வெள்ளம்தான்! இதில் பங்கு பெறுவதை இசைக் கலைஞர்கள் பெருமையாகக் கருதுவார்கள். பல்வேறு நாடுகளிலிருந்து இசைக் கலைஞர்கள் இங்கே கூடுவர்!

பொங்கல்!



தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் கொண்டாடப்படுகிறது. அறுவடைத் திரு நாள் என்றும், சூரியன் மகர ரேகையில் நுழையும் நாள் என்பதால் 'மகர சங்கராந்தி' என்றும் கூறுவர். இதனுடன் போகிப் பண்டிகையும் கொண்டாடப்படுகிறது.



2

14

வெனிஸ் திருவிழா!



இத்தாலியில் உள்ள மிதக்கும் நகரமான வெனிஸில் பிப்ரவரி - மார்ச் மாதங்களில் கொண்டாடப்படும். இந்த விழாவின்போது மக்கள் பலவித முகமூடிகளை அணிவார்கள். ஒவ்வொரு வருடமும் புதுவிதமான முகமூடிகளை யார் தயாரிக்கிறார்கள் என்று நிறுவனங்களுக்கிடையே போட்டி நடக்கும். அனைவரும் முகமூடியை அணிந்திருப்பதால் அடையாளம் கண்டுபிடிப்பதில் பலவித சுவையான வேடிக்கைகள் உண்டு!

காற்றாடித் திருவிழா!



ஜனவரி 13 அல்லது 14ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. குஜராத்தில் முக்கியமாக அஹமதாபாத்தில் அன்று வானம் முழுவதும் வண்ண வண்ணக் காற்றாடிகள்தான்! லக்னோவிலும் இந்தக் கொண்டாட்டம் உண்டு.

3



13

ஹார்பின்!

சீனாவில் உள்ள 'ஹார்பின்' என்ற பகுதியில் ஜனவரி ஐந்து முதல் ஒரு மாதத்துக்கு நடைபெறும் கோலாகலம் இது. முன்பெல்லாம் பனிக்கட்டியால் பல்வேறு விளக்குகளை உருவாக்குவார்கள். இப்போது வேறு பலவித வடிவங்களிலும்கூட பனிக்கட்டி சிற்பங்களை அமைக்கிறார்கள்.

பாலைவனத் திருவிழா!



ராஜஸ்தானில் உள்ள தார் பாலைவனத்தில் ஜனவரி/பிப்ரவரி மாதங்களில் நடைபெறுகிறது. கண்களைப் பறிக்கும் வண்ண உடைகளுடன் நாடோடிப் பாடல்களுக்கேற்ப உள்ளூர்வாசிகள் நடனம் ஆடி மகிழ்விப்பர். சிறப்பான மீசை யாருக்கு எனும் போட்டி, ஒட்டகத்தில் போலோ விளையாட்டு போன்ற சிறப்பு அம்சங்களும் உண்டு!

4

மீலாடி நபி!



ஏப்ரல் மாதம் நாடு முழுவதும் முஸ்லீம்கள் கொண்டாடும் தினம். நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் இது. அவர் மறைந்த தினமும் இதுவே. மசூதிகளில் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, குரான் வாசகங்கள் எடுத்து ஓதப்படும். தமிழகம், நாகூர், லக்னோ, ஹைதராபாத் போன்ற இடங்களில் இது சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

12

மஹாவீர் ஜெயந்தி!



இளவரசராகப் பிறந்து, துறவியான மஹாவீரரின் பிறந்த நாள். அவரால் தோற்றுவிக்கப்பட்ட சமண மதத்தைச் சேர்ந்தவர்களால் போற்றிக் கொண்டாடப்படும் தினம். ராஜஸ்தான், குஜராத், பீகார் போன்ற பகுதிகளில் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. அன்று இலவச உணவு, இலவச உடைகளை வறியவர்களுக்குத் தந்து மகிழ்வார்கள்.

5

கோகுலாஷ்டமி!





கண்ணன் பிறந்த இந்த தினம் ஆகஸ்ட் - செப்டம்பரில் வருகிறது. அன்று உரியடி உற்சவம் நடத்துவார்கள். ஒருவரின் தோள்மீது ஒருவர் என்று பிரமிடு போல ஏறிக்கொண்டும் இதைச் செய்வார்கள். சின்னச் சின்னப் பாதங்களை வீட்டு வாசலிலிருந்து, பூஜை அறை வரை வரைவார்கள். குட்டிக் கண்ணன் வீட்டுக்கு வருவதாக நம்பிக்கை!

11

பூரம்!



ஏப்ரல் மாதத்தில் வரும் பூர நட்சத்திரத் தன்று கேரளாவில் உள்ள திருச்சூரில் மிகச் சிறப்பாக கொண்டாடும் விழா. யானைகள் அணிவகுக்க, பஞ்ச வாத்தியங்கள் ஒலிக்க, திருச்சூர் அன்று திமிலோகப்படும். வடக்கு நாதர் கோவில் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மக்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்வார்கள்!

6

கிறிஸ்துமஸ்!

10



இயேசு நாதரின் பிறந்த தினமான டிசம்பர் 25 அன்று கிறிஸ்துவர்களால் கோலாகலமாகக் கொண்டாடப்படும் விழா. 'கிறிஸ்துமஸ் தாத்தா' அன்று பரிசுகளைக் குழந்தைகளுக்கு வழங்குவார். வீடுகளை அலங்கரிப்பது, 'கேக்'குகளை வாங்கி விநியோகிப்பது என்று மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். மாதா கோயில்களில் சிறப்பு வழிபாடு நடத்தப் படும்.

விநாயக சதுர்த்தி!



விநாயகரை யாருக்குத்தான் பிடிக்காது? மண் பிள்ளையாரையும், அவருக்கான சிறு குடையையும் வாங்கி பூஜை செய்து வழிபடு வது வழக்கம். கொழுக்கட்டை முக்கிய நைவேத்தியம். வட இந்தியாவில் ''கணபதி பப்பா மோரியா'' என்று உரக்க கூறியபடி விநாயகர் உருவங்களை கடலில் கரைப் பார்கள். (இதற்குப் பொருள் 'அப்பா கண பதி, அடுத்த வருடம் விரைவில் வந்துவிடு!)

7


6

அணிவகுப்பு விழா!



நியூயார்க் நகரில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் இந்த திருவிழா நடைபெறும். சிறுவர்களும் சிறுமியர்களும் ஒட்டகம், கழுதை, செம்மறி ஆடு போன்ற பல விலங்குகள் போல உருவத்தை மாற்றிக் கொண்டு வருவார்கள். ஆண்கள் அன்று ராஜாவைப் போன்று வேடம் அணிவதுண்டு. குழந்தை இயேசு பிறந்தவுடன் அதைக் காண மூன்று மன்னர்கள் வந்த நாளை இப்படி கொண்டாடுகின்றனர்.

தீபாவளி!



தீபாவளி என்றால் விளக்குகளின் அணிவகுப்பு என்று பொருள். ஸ்ரீ கிருஷ்ணர் நரகாசுரனை வதம் செய்த நாள் இது. காலையில் எண்ணெய்க் குளியல், புத்தாடை உடுத்தல், பட்டாசு வெடித்தல் என்று தடபுடலாகக் கொண்டாடுவர். ராஜஸ்தான் மற்றும் குஜராத்தில் இது புது வருடத் தொடக்கம். மஹாவீரர் முக்தியடைந்ததும் இந்த நாளில்தான் என்பதால் சமணர்களுக்கும் இது முக்கிய தினம்!

8

... 36 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

குரங்கைக் குறி பார்த்து எறிந்தார். கல் ரங்கன் முதுகிலே பட்டதும், வலி தாங் காமல் 'கீ, கீ' என்று கதறிக்கொண்டே ஓடிவிட்டது.

அன்று முழுவதும் ரங்கன் வெளி யில் தலை காட்டவே இல்லை. சிறிது தூரத்தில் இருந்த மரத்தில் ஏறி, இரண்டு கிளைகளுக்கு நடுவே உட் கார்ந்து முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தது. பாவம், அன்று முழு வதும் பட்டினி!

மறுநாள் காலையிலே மரத்துக்கு மரம் தாவி, சுவர்கள் மீது ஏறி, அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டே வந்தது. ஒரு கிழவி, ஒரு மரப்பலகையில் தேங் காய்க் கீற்றுகளை அழகாக அடுக்கி வைத்து விற்றுக் கொண்டிருந்ததைக் கண்டது.

ரங்கன் சுவரிலிருந்து ஒரே பாய்ச் சலாகப் பாய்ந்தது. தேங்காய்க் கீற்றை எட்டி எடுக்கப் போனது. மறுவிநாடி 'டங்' கென்று தலையிலே பலமாக ஓர் அடி விழுந்தது! அந்தப் பொல்லாத கிழவிதான் காக்கை விரட்டுவதற்காகப் பக்கத்திலே வைத்திருந்த தடியாலே ஓங்கி அடித்து விட்டாள்! வலி தாங்கா

"ஐயோ! இது என்ன? என் ரங்கனின் வாலை எந்தப் படுபாவி வெட்டிவிட்டான்?"

மல், கத்திக் கொண்டே ரங்கன் வெறுங் கையோடு ஓடி, மீண்டும் சுவரிலே ஏறிக்கொண்டது. அன்றைக்கும் பட் டினிதான்!

மூன்றாம்நாள் கோயில் பக்கமாகப் போய், மதில் சுவரிலே உட்கார்ந்து கூர்ந்து கூர்ந்து பார்த்தது, கொஞ்ச தூரத் திலே ஒரு பழக்கடை தெரிந்தது. அங்கே ஆப்பிள், ஆரஞ்சு, மாம்பழம் எல்லாம் இருந்தன. சீப்புச் சீப்பாய் வாழைப் பழங்கள் தொங்கிக் கொண் டிருந்தன. கடைக்காரர் அசந்த சமயம் பார்த்து ஒரு சீப்பு வாழைப் பழத்தைக்



கொண்டு வந்து விடலாமென்று நினைத்தது ரங்கன்.

கடைக்காரர் பின்புறமாகத் திரும்பி, கூடையிலிருந்த பழங்களை எண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது பார்த்து ரங்கன் ஒரே தாவாகத் தாவிப் பழக் கடைக்குள் புகுந்தது. ஒரு சீப்பு வாழைப் பழத்தைப் பிடித்து இழுத்தது.

அந்தச் சமயம், தெருவிலே நடந்து போன ஒருவர் சும்மா போகக் கூடாதா? ''ஐயோ, குரங்கு! குரங்கு!'' என்று கத்தினார். உடனே பழக்கடைக்காரர் சட்டென்று திரும்பி பார்த்தார். ரங்கன் பழத்தைப் போட்டுவிட்டு ஓடியது. ஆத்திரத்திலே பக்கத்தில் கிடந்த பழம் நறுக்குகிற கத்தியை எடுத்து ரங்கனைப் பார்த்து எறிந்தார். ரங்கனின் வால் நுனி யிலே கத்திபட்டு, ஓர் அங்குல நீளம் துண்டிக்கப்பட்டது!

ரங்கன் கதறிக்கொண்டே, நாலு கால் பாய்ச்சலில் ஓடியது. வலி பொறுக் காமல் துடியாய்த் துடித்தது. வெகு தூரம் சென்று ஓர் ஆலமரத்தில் ஏறி வாலைப்

பார்த்தது. வால் வெட்டுப்பட்டு இரத்தம் கொடகொடவென்று கொட்டுவதைக் கண்டு மிகவும் கலங்கிவிட்டது. இரத்தம் மேலும் வழியாமல் , வெட்டுப்பட்ட இடத்திலே கையை வைத்து, அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தது. வெகு நேரம் சென்று பார்த்தது. இரத்தம் கசிவது நின்று விட்டது.

ஆலமரக் கிளையில் அமர்ந்திருந்த ரங்கனுக்கு, அப்போதுதான் கோவிந்தசாமி நினைப்பு வந்தது.

'அவர் என்னிடத்திலே எவ்வளவு பிரியமாயிருந்தாரு. எப்படிப் பாசத்தைக் காட்டினாரு. நான் இந்த மூணு நாளாப் பட்டினிக் கிடக்கிறேனே! அவர் ஒரு வேளையாவது என்னைப் பட்டினி கிடக்க விட்டிருப்பாரா? ஒருத்தர் என் முதுகிலே கல்லால் அடிச்சாரு. ஒரு பாட்டி என் தலையிலே தடியாலே அடிச்சாள், கடைசியிலே, பழக்கடைக்காரர் என் வாலையே வெட்டிட்டாரே! என் எஜமான் என்னை ஒரு நாளாவது அடிச்சிருப்பாரா? திட்டினதுகூட இல்லையே! பிள்ளை மாதிரி வளர்த்தாரே! அவருக்குத் தெரியாமல் ஓடி வந்திட்டேனே! என்னைக் காணாமேன்னு அவர் துடிச்சிருப்பாரே! இந்தத் தள்ளாத வயசிலே அவர் எப்படி இருக்கிறாரோ? இனி ஒரு நிமிஷம்கூட இங்கே இருக்கப் படாது.'


மறுவிநாடி ரங்கன் மரத்திலிருந்து கீழே குதித்தது. குடுகுடுவென்று ஓடியது. முன்பு இருந்த கொட்டாம்பட்டிக்கு வந்து, கோவிந்தசாமி வழக்கமாயிருக்கிற மண்டபத்திலே பார்த்தது. அங்கே கோவிந்தசாமியைக் காணோம்! ஊரெல்லாம் தேடிப் பார்த்தது.

ஊருக்குக் கடைசியிலேயிருந்த ஓர் அரச மரத்தடியிலே கோவிந்தசாமி தூங்குவதைப் பார்த்துவிட்டது! அதற்கு ஒரே ஆனந்தம்! மெதுவாக அவர் பக்கத்திலே போய் உட்கார்ந்தது.

''பாவம், நல்லாத் தூங்கறாரு. எழுப்பக் கூடாது'' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டது.

அரைமணி நேரம் அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டே, அருகிலே அமைதியாக இருந்தது. படுத்திருந்த கோவிந்தசாமி, ''ரங்கா! ரங்கா!'' என்று கத்திக்கொண்டே எழுந்தார். எதிரிலே ரங்கனைக் கண்டதும், ''ஆ! இப்பத்தானேடா உன்னைக் கனவிலே கண்டேன்! நேரிலே வந்துட்டியே!'' என்று கூறி அதைக் கட்டிப் பிடித்து மடியிலே தூக்கி வைத்துக்கொண்டு இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் கொடுத்தார்.

''எங்கேடா போனாய் என்னைத் தனியா விட்டுட்டு? உன்னைக் காணோ



மேன்னு எங்கெங்கே தேடினேன்? யாரை, யாரையெல்லாம் விசாரிச்சேன். நல்லவேளை, நீயே திரும்பி வந்...'' கூறிக் கொண்டிருக்கும்போதே, ரங் கனின் வால் அவர் கண்ணில் பட் டது.

''ஐயோ! இது என்ன? என் ரங்கனின் வாலை எந்தப் படுபாவி வெட்டிவிட் டான்?'' என்று ஆத்திரமும், கோபமும் கலந்த குரலில் கூறி, வாலைப் பிடித்து மெல்லத் தடவிக் கொடுத்தார்.

பிறகு, ரங்கனைத் தூக்கிக்கொண்டு பக்கத்திலே இருந்த ஒரு கடைக்குப் போனார். இரண்டு நாளாக மூட்டை தூக்கிச் சம்பாதித்து வேட்டியிலே முடித்து வைத்திருந்த பணத்தை எடுத் தார். ஒரு டஜன் வாழைப்பழம் வாங்கி ரங்கனுக்கு அன்போடு ஊட்டி விட்டார். பக்கத்திலே கடலை விற்ற அம் மாளிடம், அரைப்படி கடலை வாங்கி ஆசையாகக் கொடுத்தார். ரங்கன் சாப் பிடுவதைப் பார்த்துப் பார்த்துப் பரவசப் பட்டார்.

மறுநாளே கோவிந்தசாமி ரங் கனைத் தனக்குத் தெரிந்த ஒரு தையற் காரிடம் அழைத்துச் சென்றார். துண்டு துண்டாக வெட்டிப் போட்டிருந்த வண்ண வண்ண துணிகளிலே உடை தைத்து ரங்கனுக்குப் போட்டுவிட்டார் அந்தத் தையற்காரர். அழகாக ஒரு குல் லாம் தைத்துத் தலையிலே மாட்டினார்.

இப்போது ரங்கன் முன்பைவிட, அருமையாக வித்தைகளையெல்லாம் காட்டுகிறது. கூட்டமும் நிறையக் கூடு கிறது. பணமும் அதிகம் சேருகிறது!

-செப்டெம்பர் '84 கோகுலம் இதழில் வெளியான கதை.

கவிதைப் பூங்கா

தூய்மைக் காற்றைச் சுவாசிக்க
நாளும் பூங்கா சென்றிடலாம்!
உல்லாசமாய் மர ஊஞ்சலிலே
மகிழ்ந்து நிறைந்தே ஆடிடலாம்!

பச்சை ஆடை புல்தரையை
பார்த்து நாமும் ரசித்திடலாம்!

சறுக்கி ஆடிடும் விளையாட்டில்
சண்டைகள் இன்றி ஆடிடலாம்!

உள்ளே கொணர்ந்த
திண்பண்டத்தின்
உறைகளை தொட்டியில்
சேர்த்திடலாம்!
குப்பைகள் அற்ற பெருநகராய்
குழந்தைகள் நாமும் மாற்றிடலாம்!

கன்னிக்கோவில் இராஜா

ரத்தம் பெருக்கும் மாம்பழத்தை
ரசித்து உண்போம் குழந்தைகளே!
நித்தம் கொய்யா சாப்பிட்டால்
ரத்த சோகை அகன்றிடுமாம்!

பித்தம் போக்கும் பப்பாளி
புசித்தால் பெருகும் ஞாபகமாம்!
முத்து மாதுளை சாப்பிட்டால்
மூளை விருத்தி உண்டாகும்!

சீத்தாப் பழத்தில் உயிர்ச் சத்தும்
சிவந்த வாழையில் சுண்ணாம்பும்;
சேர்த்தே உண்டு நலம்
பெறுவோம்!
வாழும் வரையில் வளம்
பெறுவோம்!

வெ. தமிழழகன்





பழங்கள்!



பூங்கா!

காக்கையாரே!

கருப்பு வண்ண காக்கையாரே
கண்ணை உருட்டி கரைகிறாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கிறாய்?

விட்டுக் கொடுத்து வாழும்
வித்தை எங்கு கற்றீரோ?
கற்கும் சிறுவர் மனத்திலே
கருத்தை விதைத்து உயர்த்துகிறாய்!





ஒற்று மையின் வலிமையை
உணர்த்த வானில் கரைகிறாய்
வண்ணக் கருப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே!

சுத்தம் தெருவில் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்
வண்ணக் குயில் குஞ்சுக்கு
வளர்ப்பு தாயும் நீயாவாய்!

கு. காளிமுத்து



டாக்டர் பக்கம் :
டாக்டர் கு. கணேசன்

தலைப்பு :
எஸ். வினோத்







அறிவியல் தொழில்நுட்பம் வளர வளர மருத்துவத் துறையும் நவீன மயமாகி வருகின்றது. நோயைக் கண்டுபிடிப்பதிலும், நோயாளிக்குச் சிகிச்சை அளிப்பதிலும் புதிய வழிமுறைகள் உருவாகின்றன. இவை சிகிச்சையை எளிமைப்படுத்துவது மட்டுமில்லாமல், நோயை விரைவில் குணப்படுத்துவதற்கும் உதவுகின்றன.

சர்க்கரை நோயைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நம் உடலில் உள்ள கணையத்தில் பீட்டா செல்கள் 'இன்சுலின்' என்ற ஹார்மோனைச் சுரக்கா விட்டால் சர்க்கரை நோய் ஏற்படுகிறது. இந் நோய் பெரியவர்களுக்கு மட்டுமின்றி, சிறுவர், சிறுமிகளுக்கும் உண்டாகிறது.

சிறுவயதில் இந் நோய் வருமானால் அவர்கள் 'இன்சுலின்' என்ற ஊசி மருந்தை தினமும் போட்டுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நோய் கட்டுப்படும். ஆனால், ஊசி குத்திக் கொள்ள வேண்டுமே என்ற பயத்தில் இந்த நோயுள்ள பல சிறுவர், சிறுமிகள் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொள்வதில்லை. இதனால் நோய் முற்றிவிடுகிறது. விளைவு, கண் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, நரம்பு பாதிப்பு, இதய பாதிப்பு என உடலில் பல பாதிப்புகளை ஏற்படுத்தி, உயிருக்கும் ஆபத்தை வரவழைக்கிறது.

இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் இந்த ஆபத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி

ஊசி இல்லாத இன்சுலின்!



வைக்கப்பட்டுள்ளது. வேதியியல் அமைப்பின்படி இன்சுலின் என்பது ஒரு புரதம். மாத்திரை வடிவில் இதைக் கொடுத்தால் இரைப்பையில் அது செரிக்கப்பட்டு விடும். ஆகவே இதை ஊசி மருந்தாக சதையில் செலுத்துவதுதான் ஒரே வழி என்று இதுவரை இருந்து வந்தது.

அதே இன்சுலினை இப்போது சில மாற்றங்கள் செய்து, இன்சுலின் மாத்திரையாக உருவாக்கியுள்ளனர். ஆனால், இதை வாய் வழியாகச் சாப்பிட முடியாது. வாயில் வைத்து உறிஞ்ச வேண்டும். இதற்கு 'இன்சுலின் இன்ஹேலர்' எனும் கருவி பயன்படுகிறது. ஆஸ்துமா நோய்க்கு உபயோகப்படும் இன்ஹேலர் போலத்தான் இதுவும்.

குழாய் போல் நீளமாக இருக்கும் இந்தக் கருவியின் அடிப் பாகத்தில் இன்சுலின் மாத்திரையை வைத்து



உடைத்து விட்டால் அது வாயுவாக மாறி அந்தக் கருவியில் நிரம்பி விடும். பின்பு அதை வாயில் வைத்து மூக்கை மூடிக்கொண்டு, ஆழமான மூச்சு இழுத்தால் இன்சுலின் வாயுவானது நுரையீரல்களுக்குள் சென்றுவிடும். அங்கு, இது ரத்தத்தில் கலந்து ரத்தச் சர்க்கரையைக் கட்டுப்படுத்துகிறது.

உலகில் இன்சுலின் ஊசிக்குப் பயந்து கொண்டு, சிகிச்சை பெறாமல் இருக்கும் பல கோடி பேருக்கு 'இன்சுலின் இன்ஹேலர்' ஒரு வரப் பிரசாதம்தான் என்றால் மிகையில்லை அல்லவா?

தலைப்பு:
எம்.எஸ். மதுமிதா



''செந்தாழைக்கு இன்று பிறந்த நாள். 10 வயது முடிந்து 11 தொடங்கு கிறது. அவள் பார்ப்பதற்கு எளிமை யானவள், பழகுவதற்கு இனிமை யானவள். அவள் இருக்குமிடத்தில் சிரிப்புக்குப் பஞ்சம் இருக்காது. நற் பண்புகள் நிறைந்தவள். பிற உயிர்கள் மேல் அன்பு கொண்டவள். சுற்றுச் சூழல் மேல் அக்கறை கொண்டவள். இதுவரை 850 மரக்கன்றுகள் நட்டிருக்கிறாள்...'' சித்திரகுப்தன் தம் பெருஞ்சுவடியிலிருந்து செந்தாழை யைப் பற்றிய குறிப்புகளைப் படித்துக் கொண்டே போனார்.

''இவ்வளவு நல்ல குழந்தையின் உயிரைக் கவர்ந்து வரச் சொல்கிறாயே சித்திரகுப்தா!'' எமனின் குரலில் வருத் தம் தொனித்தது.

''நான் சொல்லவில்லை தர்மராசா! சுவடி சொல்கிறது...'' என்றார் சித்திர குப்தன்.

''கடவுளின் கணக்கைப் பற்றிப் பேச நாம் யார்? சரி அவள் உயிரை நான் எப்படிப் பறித்து வர வேண்டும்?''

''தர்மராசா, கோரச் சாவாக இல்லாமல், அதிகம் வலியில்லா மல், குழந்தை உயி ரைக் கவர்ந்து வந்தால் நலம் என்று குறிப்பு உள்ளது.''

''அப்படியா? நன்று! நன்று! குழந்தையின் மருத்துவக் குறிப்பில் இதய வால்வில் ஏதோ பழுது இருப்பதாகக் குறிப்பிட் டாயே... அதைச் சற்று விரிவாகக் கூறு.''

சித்திரகுப்தன் சுவடியைப் புரட்ட, எமன், எருமையை அழைத்தார்.

செந்தாழையின் வீடு. வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது. செந் தாழை, அப்பா வாங்கித் தந்திருந்த புத்தம் புது மிதிவண்டியை வீட்டி னுள்ளே நிறுத்தி வைத்து, அதன் இருக்கையில் அமர்ந்திருந்தாள்.

திடீரென செந்தாழை படபடப்பாய் உணர்ந்தாள். நெற்றியிலே பொட்டுப் பொட்டாய் வியர்வை முத்துக்கள் அரும்பின. நெஞ்சாங்கூட்டில் ஏதோ செய்தது. அப்போது, ''பாப்பா!'' என்று



விசித்திரக் கதை

குறும்பலாப்பேரிப் பாண்டியன்

சொர்க்கத்தில் செந்தாழை!

கரகரப்பானதொரு குரல் அவளை அழைத்தது. ஏறிட்டுப் பார்த்தவள் அதிர்ந்து போனாள். வீட்டுக்குள்ளே ஒரு எருமை மாடு நின்று கொண் டிருந்தது. அதன் மேலே கன்னங் கரேலென்று அரக்கன் போல ஒருவன் அமர்ந்திருப்பதையும், அவன் ஒரு சுருக்குக் கயிற்றைத் தன்னை நோக்கி வீசுவதையும் அவள் கண்டாள்.

எமனின் பாசம் அவளைத் தீண் டியது. கையிலிருந்த புத்தகம் நழுவத் தடாலென்று மிதிவண்டியோடு கீழே சாய்ந்தது, செந்தாழையின் உயிரற்ற உடல்.

செந்தாழைக்குத் தான் செத்துப் போய்விட்டதை முதலில் நம்பத்தான் முடியவில்லை! ஆனால் எமன் மாமா வின் முதுகைக் கட்டிக்கொண்டு எருமை வாகனத்தில் மேகக் கூட்டங் களுக்கிடையே பறந்து கொண்டிருக் கையில் அதை நம்பாமலும் இருக்க முடியவில்லை.

வழியெல்லாம், ''மாமா மாமா'' என்று எமனைக் கேள்விகளால் துளைத்தபடியே வந்தாள்.

''மாமா, என்னை சொர்க் கத்துக்குத்தானே கூட்டிக் கொண்டு போகிறீர்கள்? அங்கே என் தாத்தா பாட்டி, மல்லிகை அத்தை எல்லோரும் இருப்பார்கள்தானே? இனிமேல் என் செல்ல நாய் மணிக்குட்டியை யார் பார்த்துக் கொள்வார்கள்...? ஆசை ஆசையாய் புது மிதி வண்டி கேட்டு வாங்கினேன். அதை நான் இன்னும் வெளியே கொண்டுபோய் ஓட்டிக்கூடப் பார்க்க வில்லை'' என்றாள்.



ஓவியம்: ராம்கி

ஒரு வழியாய் மேலுலகம் வந்து சேர்ந்தார்கள். வழி சொர்க்கம், நரகம் என்று இரண்டாகப் பிரிந்தது. எமன் விடைபெற்றுக் கொண்டான்.

வெள்ளை உடை அணிந்திருந்த ஒரு தேவனும் தேவதையும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். ஆளுக்கொரு கையைப் பற்றிச் செந்தாழையைத் தூக்கிக்கொண்டு இறக்கை அடித்துப் பறந்தார்கள், சொர்க்க வாசலை நோக்கி. செந்தாழைக்குக் குழப்பமாக இருந்தது. கேட்டே விட்டாள்.



"உங்களைப் பார்த்தால் கிறித்துவ தேவதைகள் போலிருக்கிறதே... நான் இந்துவாயிற்றே! இந்துக்களின் சொர்க்கத்துக்கு என்னைக் கூட்டிச் செல்ல மாட்டீர்களா?"

"உங்களைப் பார்த்தால் கிறித்துவ தேவதைகள் போலிருக்கிறதே... நான் இந்துவாயிற்றே! இந்துக்களின் சொர்க்கத்துக்கு என்னைக் கூட்டிச் செல்ல மாட்டீர்களா?"

தேவனும் தேவதையும் சிரித்தார்கள். "நாங்கள் கிறித்துவர்களும் அல்ல. இனி நீ இந்துவும் அல்ல! இங்கே இருப்பது ஒரே மதம்தான். அதுதான் அன்பு மதம்! அன்புதான் கடவுள். உண்மைக் கடவுளின் வடிவத்தை உங்கள் பூவுலகில் உணர்ந்தவர் எவருமேயில்லை. ஒவ்வொரு மதத்தினரும் கடவுளைப் பல்வேறு வடிவங்களில் பார்க்கிறார்கள். உணர்கிறார்கள். சொர்க்கம், நரகம் எப்படி இருக்கும் என்று பல்வேறு கற்பிதங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு மதத்தினரும் இறந்து போய் இங்கே வருகையில் அவர்களுக்குக் குழப்பமில்லாமல் இருப்பதற்காக முதலில் அவர்களுக்கு அறிமுகமான கற்பிதங்களின்படி மாயத் தோற்றங்களை நாங்கள் காட்டுகிறோம்."

செந்தாழைக்குப் புரிவதுபோல் இருந்தது.

"நம்ம டீச்சருக்கு வர வர ஞாபக மறதி ரொம்பவே அதிகமாயிடுச்சு!"

"எப்படிடா சொல்றே?"

"'இராமாயணம்'னு நம்ம டீச்சரே கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போர்டுல எழுதிட்டு, 'இதை எழுதியது யார்?'னு இப்ப கேக்கறாங்களே!"

– வி.வேல்முருகன்





''கங்காரு எட்டடி பாய்ஞ்சா... அதன் குட்டி எத்தனை அடி பாயும்?''

''எட்டடிதான்! கங்காருவின் பையில் தானே அதன் குட்டியும் இருக்கும்!''

- எஸ்.மெகந்தி பாரதி,
ஆறாம் வகுப்பு,
பழனியம்மாள் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, கோபி.

திடீரென தேவனும் தேவதையும் மறைந்து போனார்கள். வரிசை வரிசையாய் நின்றுகொண்டிருந்த மக்கள் கூட்டத்தினிடையே தானும் நின்றுகொண்டிருப்பதை செந்தாழை உணர்ந்தாள்.

காத்திருந்த மக்களை அவரவர் செய்த நல்ல செயல்களின் அளவை வைத்துத் தரம் பிரித்தார்கள். சற்று நேரத்தில் இந்திரன் போல் தோற்றமளித்த ஒருவர், வெள்ளை யானையில் வந்து இறங்கினார்.

''பாப்பா! உனக்கு நிறைய மதிப்பெண்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் உயர் உயர் தரத்தை எட்ட உனக்குச் சில மதிப்பெண்கள் குறைகின்றன. உயர் உயர் தரத்தை நீ எட்டி விட்டால் உடனடியாக நீ உண்மைக் கடவுளை பார்க்க முடியும்! அதிலே உனக்கு விருப்பம் தானே?'' என்று கேட்டார்.


''ஆமாம்... ஆமாம்...'' செந்தாழை வேக வேகமாய்த் தலையாட்டினாள்.

''நீ இறந்து போய் மூன்று மணி நேரம் ஆகிவிட்டது. பூவுலகில் இருக்கும் உன் உடலிலிருந்து கண்களை எடுக்க இன்னும் மூன்று மணி நேரம்தான் இருக்கிறது! எனவே நீ உன் தந்தையாரோடு பேசி உன் உடலிருந்து கண்களை எடுத்துத் தானம் செய்யச் சொல். அப்போது உனக்குத் தேவையான மதிப்பெண்கள் கிடைத்துவிடும்!''

''அது சரி. ஆனால் நான் அப்பாவிடம் எப்படிப் பேசுவது?''

அவர் புன்னகைத்தபடியே வெள்ளை யானையைத் தட்டிக் கொடுத்தார். அது பிளிறிவிட்டு, தும்பிக்கையை செந்தாழையிடம் நீட்டியது. அதிலே ஒரு செல்பேசி இருந்தது. ஆவலுடன் அதை எடுத்து செந்தாழை அப்பாவின் எண்களை அழுத்தினாள். அப்பாவின் செல்பேசி அலறியது.

''அப்பா, நான்தான்பா செந்தாழை பேசுகிறேன். சொர்க்கத்திலிருந்து தான்பா பேசுகிறேன். அப்பா அழாதீர்கள்! அப்பா, கவலைப்படாதீர்களப்பா... நான் இங்கே நன்றாக இருக்கிறேன்ப்பா. அப்பா நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டுமப்பா. என் கண்களை தானம் செய்துவிட வேண்டும். நான் கடவுள் கிட்டே உடனே போய்விடுவேன் அப்பா...'' என்றாள். அப்படியே செய்வதாக அப்பா கூறினார். ○



வண்ணம் தீட்டுங்கள்!

குட்டீஸ் கோகுலம்

இந்தப் படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்கள்!

151) வை.விக்னேஷ், ஏழாம் வகுப்பு, ஸ்ரீ வித்யா மந்திர் மேனிலைப் பள்ளி, மெய்யனூர்.

152) எஸ்.வைஷ்ணவி, முதல் வகுப்பு, சிவானந்த பாலலயா, திருச்சி.

153) ஜெ.விண்ணரசி, ஐந்தாம் வகுப்பு, வேல்ஸ் வித்யாஷ்ரம், சென்னை - 75.

154) என்.சுசீந்திரன், எட்டாம் வகுப்பு, அரசினர் மேனிலைப் பள்ளி, மானாம்பதி.

155) எஸ்.பிரியதர்ஷினி, ஐந்தாம் வகுப்பு, ரோட்டரி லாஹ மெட்ரிக் மேனிலைப் பள்ளி, மதுரை.

156) கோ.இராகுல்வாசன், பதினொராம் வகுப்பு, டி.ஏ.வி.மேனிலைப் பள்ளி, சென்னை - 37

157) ஜெ. வைஷ்ணப் பிரியா, எட்டாம் வகுப்பு, விவேகானந்தா மெட்ரிக் பள்ளி, பாண்டமங்கலம்.

158) பரத் ரவிகுமார், ஆறாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ.மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கோயம்புத்தூர்.

159) அ.வேதவிவிக்தா, ஆறாம் வகுப்பு, எஸ்.ஆர்.வி.மெட்ரிக் மேனிலைப் பள்ளி, திருச்சி.

160) ஆர்.தனலட்சுமி, நான்காம் வகுப்பு, சரத் தாக்கர் நர்ஸரி பிரைமரி பள்ளி, திருநெல்வேலி.

161) பா.இரஞ்சித்குமார், ஒன்பதாம் வகுப்பு, திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி, புதுப்பேட்டை.

162) இராம.முத்து, இரண்டாம் வகுப்பு, புனித செபஸ்தியார் மெட்ரிக் பள்ளி, பெரியபுரம்.

163) கி.ச.திலீபன், பத்தாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, தூ.நா.பாளையம்.

164) வி.ஜெயஸ்ரீ, ஏழாம் வகுப்பு, சில்ட்ரன் கார்டன் மேனிலைப்பள்ளி, சென்னை.

165) அ.சார்லஸ், ஐந்தாம் வகுப்பு, எஸ்.ஆர்.எஃப்.வித்யாலயா மெட்ரிக் பள்ளி, மணலி.

166) இரா.தனேஷ்வரி, ஒன்பதாம் வகுப்பு, குருதேவர் மெட்ரிக் மேனிலைப் பள்ளி,

வணக்கம் குழந்தைகளே!

'கோகுலம் சிறுவர் சங்கம்' உறுப்பினர்கள் பட்டியல் இந்த இதழிலும் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டைகளில் இடம் பெற்றுள்ளன. ஒரே பெயரிலேயே சிலர் இரண்டு கூப்பன்களை அனுப்புகிறார்கள். கூப்பன் அனுப்பிய அனைவரின் புகைப்படமும், பட்டியலும் நிச்சயம் வெளியாகும். ஆகவே ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்ப வேண்டியதில்லை. நண்பர்களை அறிமுகம் செய்யலாம். சரிதானே!

அன்புடன்
ஆசிரியர்

கோகுலம் சிறுவர் சங்கம்!



வாங்கல்.

167) ஜெ.இரா.ரூபன், எட்டாம் வகுப்பு, கன்கார்ட் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, பருகூர்.

168) இராம.அஸ்வினி, ஆறாம் வகுப்பு, புனித செபஸ்தியார் மெட்ரிக் பள்ளி, மெய்யபுரம்

169) மோ.வஸந்தகுமார், எட்டாம் வகுப்பு, ஜவஹர் மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளி, நெய்வேலி.

170) என்.ஆர்.ஷைலஜா, இரண்டாம் வகுப்பு, ஸ்ரீ சத்யசாய் இன்ஸ்டிடியூட் ஆஃப் எஜூகேர், சென்னை - 44.

171) லூ.பவுல்அரசு, எட்டாம் வகுப்பு, பதிப்பகச் செம்மல் க.கணபதி அரசு மேனிலைப் பள்ளி, சென்னை.

172) வா.சந்தியா, மூன்றாம் வகுப்பு, த.ஆ.வே.பெல் பள்ளி, இராணிப்பேட்டை.

173) ச.சுப்ரஜா, ஐந்தாம் வகுப்பு, சுந்தரம் மெட்ரிக் பள்ளி, கிருஷ்ணாபுரம்.

174) மு.இ.முகம்மது ஆசீப், ஒன்பதாம் வகுப்பு, அல் அமீன் மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளி, கும்பகோணம்.

175) அக்ஷய காயத்ரி ராவ், ஆறாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ண சாரதா மேனிலைப் பள்ளி, சேலம்.

176) கே.கோபி, எட்டாம் வகுப்பு, அரசினர் மேனிலைப் பள்ளி, மானாம்பதி.

177) வி.தன்யா, ஏழாம் வகுப்பு, அமிர்தாமயி உயர்நிலைப் பள்ளி, கள்ளிக்கோட்டை.

178) ச.ஸ்ரீ.பாரதி, பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்.

179) மு.சிவரஞ்சனி, முதல் வகுப்பு, ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிக் மேனிலைப் பள்ளி, வலங்கைமான்.

180) ஜெ.ஹரீஷ்குமார், நான்காம் வகுப்பு, கொங்கு மெட்ரிகுலேஷன் பள்ளி, பெருந்துறை.

181) ஆர்.ஜனனி, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீ இராமகிருஷ்ணா நர்ஸரி பள்ளி, ஏரகுடி.

182) நா.கோலப்பன், எட்டாம் வகுப்பு, ஸ்ரீ வித்யாலயா பள்ளி, கோபி.

183) எஸ்.கிருபாசங்கர், ஏழாம் வகுப்பு, பெசன்ட் தியாசாபிகல் மேனிலைப் பள்ளி, சென்னை - 90.

184) த.ஆகாஷ்மாரி, ஆறாம் வகுப்பு, ஸ்ரீசங்கரா நடுநிலைப் பள்ளி, கிருஷ்ணாபுரம்.

185) டி.யாழினி, ஒன்பதாம் வகுப்பு, மகரிஷி வித்யாமந்திர் மெட்ரிக் பள்ளி, திருவண்ணாமலை.



186) டி.தாமினி, ஆறாம் வகுப்பு, மகரிஷி வித்யாமந்திர் மெட்ரிக் பள்ளி, திருவண்ணாமலை.

187) எஸ்.டொனால்ட்தாஸ், எட்டாம் வகுப்பு, விக்டரி மெட்ரிக் மேனிலைப் பள்ளி, மைலோடு

188) ரா.கலைச்செல்வி, ஒன்பதாம் வகுப்பு, லாமெக்ஸ் மேனிலைப்பள்ளி, சென்னை - 92.

189) தே.எம்லின், ஒன்பதாம் வகுப்பு, எஸ்.டி.ஏ.பள்ளி, மதுரை.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் 'கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

190) எஸ். சௌம்யா, பன்னிரண்டாம் வகுப்பு, ஆகாஷ் வித்யாலயா, சென்னை - 14
191) வி.விக்னேஷ்வரன், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, நம்பியூர்
192) ச.சிந்துஜா, பதினொராம் வகுப்பு, டி.வி.எஸ்.மேனிலைப் பள்ளி, மதுரை.
193) இர.விக்னேஷ், ஒன்பதாம் வகுப்பு, கலைமகள் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, காட்டுமன்னார்கோயில்.
194) ஜி.ரூபாவித்யா, இரண்டாம் வகுப்பு, நேஷனல் பப்ளிக் பள்ளி, சென்னை.
195) ஜி.ரேகாவினயா, இரண்டாம் வகுப்பு, நேஷனல் பப்ளிக் பள்ளி, சென்னை.
196) வி.விக்னேஷ், பதினொராம் வகுப்பு, அர்சர்ஸ் பள்ளி, மூத்தூர்.
197) ம.ப்ரியா, ஐந்தாம் வகுப்பு, ஆர்.கே.வி.மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளி, கோயம்புத்தூர்.
198) ஆர்.நாகார்ஜுன், ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, உடுக்கம்பாளையம்.
199) எம்.மோனிகா, பதினொராம் வகுப்பு, மேரி இம்மானுவேல் பெண்கள் மேனிலைப் பள்ளி.
200) இ.கோகுல், ஐந்தாம் வகுப்பு, கேந்திரீய வித்யாலயா, தஞ்சாவூர்.

நரி வளர்த்த புலிக் குட்டி



ஒரு காட்டில் புலி ஜோடி ஒன்று அன்போடு வாழ்ந்து வந்தன. அதற்கு மூன்று குட்டிகள் இருந்தன. தாய், தந்தையுடன் அக்குட்டிகள் உல்லாசமாக காட்டில் உலாவின. ஒருநாள் திடீரென்று பெரும் புயல் காற்று அடித்தது. அக்காற்றின் வேகத்தில் பெரிய மரம் ஒன்று வேரோடு சாய்ந்து விழ, அம்மரத்தின் அடியில் ஒதுங்கியிருந்த புலிக் குடும்பத்தின் மீது மரம் விழுந்தது. அதில் மாட்டிக் கொண்டு புலிகளும், குட்டிகளும் இறந்து விட்டன. அதில் ஒரு குட்டி மட்டும் அதிஷ்டவசமாக தப்பிப் பிழைத்துக்கொண்டது. புயல் அடித்து ஓய்ந்தது. இரவெல்லாம் பெய்த மழையில் நனைந்து புலிக்குட்டி குளிரால் நடுங்கியது. பொழுது புலர்ந்தது. புலிக்குட்டிக்கு பசி எடுத்தது.

அவ்வழியாக ஒரு நரிக் குடும்பம் சென்றன. ''புலிக்குட்டியே, ஏன் இங்கு படுத்திருக்கிறாய்? உன் அம்மா எங்கே?'' என்று கேட்டது பெண் நரி. புலிக்குட்டி அரை மயக்கத்துடன் ''பசி... பசி...'' என்று முனகியது.

நரி தன் பாலை புலிக்குட்டிக்குப் புகட்டியது. புலிக்குட்டியும் வயிறு முட்ட பாலைக் குடித்து பசியாறியது. பிறகு நடந்ததைச் சொன்னது. இதைக் கேட்ட ஆண் நரி ''பார்க்க பாவமா இருக்குது, நம்மோடு அழைச்சுக்கலாம்'' என்



றது. அன்று முதல் நரிக்குட்டிகளும், புலிக் குட்டியும் பேதமின்றி தாய் நரி மடியில் பால் குடித்து வளர்ந்தன.

பரிசுக் கதை : ஏ. ஷர்மிளா
ஓவியம் : மகேஸ்
தலைப்பு : ப. வைகுந்த்

நரிக்கூட்டத்தில் வளர்ந்த புலிக் குட்டிக்கு நரிகளின் தந்திரபுத்தி, சாமர்த் தியம் எல்லாம் வந்தது.

புலிக்குட்டி வளர்ந்து பெரியதானது. ஒருநாள் ''அம்மா எனக்கு மான்கறி சாப்பிட வேண்டும் என்று ஆசையாக உள்ளது'' என்று கேட்டது.

''உனக்கென்னடா செல்லம், நீ வளர்ந்துவிட்டாய். உனக்கு வேண்டியதை நீயே வேட்டையாடிச் சாப்பிடு'' என்றது தாய் நரி.

''சரிம்மா, நீங்க சொன்னதைப் போலவே நாளைக்கு போய் வேட்டையாடுகிறேன்'' என்றது. அடுத்த நாள் காலை எழுந்ததும் புலி, மான் கூட்டத்தை தேடிச் சென்றது. வேட்டையாடிப் பழகாத புலி, வேட்டை யாடத் தெரியாமல் மானை துரத்திக் கொண்டே சென்றது.

மருண்டு ஓடிய மான்களில் ஒன்று சட்டென்று நின்றது. ''இதைப் பார்த்தா நரிகள் வளர்க்கின்ற புலி போல் உள்ளது. இதற்கு நம்மை கண்டால் பயப்படுமாறு திருப்பி நாம் தாக்கலாம் வாருங்கள்'' என்றது அம்மான்.

''அடடா... நரிக் கூட்டத்தில் வளரும் புலியா?'' என்று கூறிக் கொண்டே ஓடிய மான்கள், அனைத்தும் திரும்பி வந்து, தங்கள் கொம்புகளால் தாக்கி புலியை காயப்படுத்தின. வலியால் துடித்த புலி தப்பித்தால் போதுமென்று ஓடி வந்தது.

''அம்மா, நீங்கள் சொன்னதைப் போல் மான் கூட்டத்தை துரத்தினேன். ஆனால் அவைகள் ஒன்று சேர்ந்து கொம்பினால் என்னை தாக்கிவிட்டன. எனக்கு பயமாக உள்ளது அம்மா'' என்றது புலி.

''பயப்படாதே கண்ணா, நான் ஒரு தந்திரம் சொல்கிறேன். அதன்படி செய்'' என்றது தாய் நரி.

''சரி அம்மா'' என்ற புலி, ஒரு மான் தோலை எடுத்து போர்த்திக் கொண்டது.

''சரி, இப்போ மான்கள் கூட்டத்தில் போய் கலந்துவிடு. சமயம் பார்த்து ஒவ்வொன்றாக அடித்து,கொன்று எடுத்து வா. நாம் எல்லோரும் சேர்ந்து சாப்பிட லாம்'' என்றது நரி.

''சரிம்மா. அப்படியே செய்கிறேன்'' என்ற புலி, மான் கூட்டத்தை அடைந்தது.

''யாரப்பா நீ?'' என்று சந்தேகத்துடன் கேட்டது மான் கூட்டத் தலைவன்.

''ஐயா, நான் தண்ணீர் குடிக்க ஆற்றுக் குச் சென்றேன். என் போதாதவேளை, அங்கே ஒரு புலியும் தண்ணீர் குடிக்க வந்தது. என்னை பார்த்ததும் துரத்தியது. அதனிடமிருந்து தப்பித்து வந்தேன்'' என்று நீலிக் கண்ணீர் வடித்தது புலி.

புலியின் தந்திரத்தை அறியாத தலைவன் ''சரி, சரி இன்று முதல் நீயும் எங்களது நண்பன்'' என்றது. மற்ற மான்களும் தலைவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு மான்தோல் போர்த்திய புலியை நண்பனாய்ச் சேர்த்துக்கொண் டன. அதற்கு உணவு (புல்) கொடுத்து சாப்பிடச் சொன்னது.

புலி பசித்தாலும் புல்லைச் சாப்பிடாது அல்லவா? இந்தப் புலியும் சாப்பிடுவது போல் பாவனை செய்தது. இரவு நேரத்தில்

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில்
இரண்டாம் பரிசு ரூ.500/- பெறும் கதை

புலிக்கு பயங்கர பசி எடுத்தது. ஏதாவது ஒரு மானை வேட்டையாடிச் சாப்பிடலாம் என்று நினைத்து மான் கூட்டத்தில் நுழைந்தது.

அப்போது மான்கள் ஒன்றாக கூடி பேசிக் கொண்டிப்பதைக் கேட்டது. ''நண்பர்களே, இன்று நம்மிடம் புதிதாக வந்துள்ள நண்பனை அன்புடன் கவனித்துக் கொள்ள வேண்டும். நாளைக்கு நாம் செல்லும் புல்வெளியில் ஒற்றுமையாக நாம் பகிர்ந்து சாப்பிடுவதுபோல அந்த நண்பனுக்கும் பகிர்ந்து தர வேண்டும். நம்மில் ஒருவனாக மதிக்க வேண்டும்'' என்று மான் கூட்டத் தலைவன் பேசியதைக் கேட்டு மற்ற மான்களும் சரியென ஆமோதித்தன.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த புலி மனம் வருந்தியது. ''இவ்வளவு நல்ல நண்பர்களையா நாம் கொல்ல நினைத்தோம்? இவர்களின் நல்ல பண்புகளை நாமும் பழகிக் கொள்ள வேண்டும். அதற்கு இவர்களுடனே நாம் இருக்க வேண்டும். இம்மான்களை கொல்வதை விட மான் கூட்டத்துக்கு பாதுகாப்பாக இனி நாம் இருக்க வேண்டும்' என்று நினைத்தது.

உடனே தன் மீதுள்ள மான்தோலை நீக்கியது. புலியைக் கண்ட மான்கள் மிரண்டன.

''நான் நரிகளால் வளர்க்கப்பட்டவன். நரி தாயின் தந்திரத்தால் முதலில் நான்

''உருவத்தை மாற்றிக் கொள்ள முடியாதே, அதனால் என் குணத்தை மாற்றிக் கொள்கிறேன்''

உங்களைக் கொல்லவே வந்தேன். ஆனால் உங்களிடமுள்ள நல்ல குணங்களைப் பார்த்தேன். மிகவும் பிடித்திருந்தது. நானும் உங்களைப் போல் மாற ஆசைப்பட்டேன். என்ன செய்வது? உருவத்தை மாற்றிக் கொள்ள முடியாதே. அதனால் என் குணத்தை மாற்றிக் கொள்கிறேன். உங்களுக்கு காட்டு விலங்குகளால் தீங்கு நேராத வண்ணம் நான் பாதுகாப்பாக இருக்கிறேன். என்னை நம்புங்கள்'' என்றது புலி.

அன்று முதல் மான் கூட்டத்துக்குப் பாதுகாப்பாக அந்தக் காட்டில் உலா வந்தது புலி.



இனிமே நண்பர்கள்



படிப்பினைக் கதை ➤ மு. நடராசன்
ஓவியம் ➤ சேகர்
தலைப்பு ➤ ஆர். சந்தோஷ் கிருஷ்ணா

'ஆண்டவா, அடுத்த பிறவியிலாவது நான் மனிதனாய்ப் பிறக்க வேண்டும். என்னை எங்கு கண்டாலும் விரட்டி விரட்டி அடிக்கும் அந்தச் சிறுவர்களை, நான் கற்களோடு விரட்ட வேண்டும்' நினைத்தவாறு கோவிலுக்கு அருகில் இருந்த குளக்கரையை வட்டமடித்துக் கொண்டிருந்தேன்.



மூன்றாவது தெருவில் இருக்கும் அந்த அருணும் நான்காவது தெருக்கோடியில் இருக்கும் சிவாவும் என்னமாய் நம்மைப் படுத்துகிறார்கள். அவர்கள் இருக்கும் தெருப் பக்கம் செல்லவே பயமாய் இருக்கிறது. இருந்தாலும் குழந்தைக்குப் போக்குக் காட்டி சாதம் ஊட்டுவதற்காக 'த்சொ...த்சொ' என அழைத்து, நமக்குக் கொஞ்சம் சோறு தரும் அபிராமி அம்மா, அருண் வீட்டுத் தெருவிலும், சாப்பிட்டு முடித்த பின் ஒரு உருண்டை சோறு நமக்கென வைக்கும் வேலுத் தாத்தா, சிவா வீட்டுத் தெருவிலும்தானே இருக்கிறார்கள்.

அருணாவது பரவாயில்லை. நம்மைப் பார்த்தபின் கையில் கிடைக்கும் கல்லை எடுத்து வீசுகிறான். அவன் குனியும் போதே எச்சரிக்கையாகி பெரும்பாலும் அந்தக் கல் நம்மீது விழாமல் தப்பித்துக் கொள்கிறாம். சில நேரங்களில் அடிபட்டாலும் ஓரிரு நாட்களில் வலி சரியாகிவிடுகிறது.

இந்த சிவா இருக்கிறானே பொல்லாதவன்! எங்கிருந்தாலும் உண்டி





வில்லில் கல்லை வைத்து நமது காலையே குறி வைக்கிறான். வீதியில் பாதி தூரம் ஓடிவிட்டாலும், கல் சரியாய் வந்து நமது காலைப் பதம் பார்த்து விடுகிறது. ஒரு காலை மடித்து மூன்று கால்களில் விந்தி விந்தி ஓடுவது எவ்வளவு கஷ்டமாய் இருக்கிறது!

என்ன செய்வது? ஒருமுறை நண்பர்கள் நான்கு பேரை அழைத்துக்கொண்டு போய், அவர்கள் வீட்டு முன்பு நின்று கூட கும்பலாய் குரைத்தாகிவிட்டது. பெரியவர்கள் தடியை எடுத்துக்கொண்டு வர, நண்பர்கள் ஆளுக்கொரு பக்கமாய்ப் பறந்து விட்டார்கள்.

அன்று மாலை நேரம். லேசாக இருள் பரவத் தொடங்கியிருந்தது. காலை முதல் எங்கெங்கோ சுற்றியும் உணவு கிடைக்கவில்லை. வேலுத் தாத்தா வீட்டு முகப்பில் போய் படுத்துக்கொண்டால் கொஞ்சம் சோறு கிடைக்கும்.

வேலுத் தாத்தாவின் வீட்டுக்கு சிவா வீட்டைத் தாண்டித்தான் போக வேண்டும். பசி பயத்தை வென்றது. சிவா வீட்டு வழியாக மிக மெதுவாகச் சென்றேன்.

வழியில் அருணைப் பார்த்தேன். அவன் கையில் சிவாவின் உண்டிவில். என்னைப் பார்த்ததும் கீழே குனிந்து ஒரு கல்லை எடுத்து, உண்டிவில்லில் வைத்து, இழுத்து விட்டான். நான் கூனிய, அந்த நேரத்தில் எதிரே வந்த சிவாவின் காலில் 'சுளீர்' என தாக்கியது கல்.

சத்தம் கேட்டு அங்கு வந்த சிவாவின் தந்தை நடந்ததைப் புரிந்து கொண்டார். நல்லவேளை, காயமோ, ரத்தமோ இல்லை. அடிபட்ட இடத்தில் முட்டையாய் வீங்கியிருந்தது.

''உனக்கு நல்லா வேணும். எத்தனை தடவை சொல்லியிருக்கேன். இந்த உண்டிவில் அடிக்கும் பழக்கம் கெட்டதுன்னு. என்ன விளையாட்டு இது?'' என்றவர், உண்டி வில்லைப் பிடுங்கி வேகமாய் விட்டெறிந்தார். அது எங்கோ போய் விழுந்தது. நடந்த அனைத்தையும் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

மெதுவாக அவர்களை நெருங்கி சிவாவின் கைகளை நாவால் நக்கினேன். வாலை ஆட்டினேன். அருண் என்னைத் தூக்கி தனது மடியில் வைத்துக் கொண்டான்.

"உனக்கு நல்லா வேணும். எத்தனை தடவை சொல்லி இருக்கேன். இந்த உண்டிவில் அடிக்கும் பழக்கம் கெட்டதுன்னு"

''ஸாரி... தெரியாம நாங்க உன்னைக் கஷ்டப்படுத்திட்டோம். இனிமே நீயும் எங்களோட 'பெஸ்ட் பிரண்டு' சரியா?'' என்றான் அருண். ○

விடையைச் சொல்; பரிசை வெல் - 5

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள்.
ஆசிரியர் தீர்ப்பே இறுதி!

முடிவு தேதி 10.11.2007

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



போட்டி • பரிசு ரூ.1000/-

கேள்விகள்:

1. பால், பழம், சர்க்கரை சாப்பிட்ட பண்ணையார் பெயர் ....
2. யுனெஸ்கோ அமைப்பு குழந்தைகள் தினம் கொண்டாடும் நாள் ....
3. சைக்கிளில் வேகமாக சென்று அடிப்பட்ட சிறுமியின் பெயர் ....
4. செந்தாழை செய்த நல்ல காரியம்..
5. 'ரஸ்கின் பாண்ட்' பத்மஸ்ரீ விருது பெற்ற வருடம் ....

என் பெயர்	: ....
வகுப்பு, பள்ளி	: ....
	: ....
வீட்டு முகவரி	: ....
	....
	....

பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள்.



சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும். மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!


அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம்,

சாதனைத் தளிர்கள்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032.


தமிழ்நாடு வனத்துறை
வன உயிரின வார விழா - 2006
சான்றிதழ்

ஓவிய இளவரசர்!



கீழக்கரை, நேஷனல் அகாடமி பள்ளியில் ஆறாம் வகுப்பு படிப்பவர் ஜாஸிம் ஃபஷத். மாவட்ட, மாநில அளவிலான பல்வேறு ஓவியப் போட்டிகளில் பங்கேற்று, பல்வேறு பரிசுகளை வென்றுள்ளார். 'பவர்கிரிட் இந்தியா' நடத்திய மின் சக்தி ஓவியப் போட்டி, தமிழ்நாடு வனத்துறை நடத்திய போட்டிகள் இவற்றில் அடக்கம். யுவ கலா பாரதி விருதையும் பெற்றுள்ளார். ஜாஸிம் வருங்காலத்தில் உலகம் வியக்கும் ஓவியராக உயர வாழ்த்துவோம்!

சங்கீத அரசி!





திருச்சி, சாவித்ரி வித்யாசாலா ஹிந்து மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிப்பவர் **ஸ்ரீவித்யா**. மாவட்ட அளவில் விவேகானந்தர் நினைவு பேச்சுப் போட்டி ஆகஸ்ட் மாதம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசும் சான்றிதழும் பெற்றார். அது மட்டுமா? கர்நாடக சங்கீதமும் முறையாக பயின்று வருகிறார். விரைவிலேயே அரங்கேற்றம் நடத்தி சங்கீத அரசியாக மேடைகளில் வலம் வர கரவொலி எழுப்புவோம்!



சென்னை, கேந்திரிய வித்யாலயாவில் ஐந்தாம் வகுப்பு படிப்பவர் **மந்த்ரா**. தமிழ்நாடு பாலபவன் மூலமாக, கடந்த ஆகஸ்டில் வேலூர் மாவட்டம் ஆற்காட்டில் நடைபெற்ற ஜிம்னாஸ்டிக் போட்டியில் பங்கேற்று, இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். மந்த்ரா விளையாட்டுத் துறையில் மேலும் வளர்ந்து, இந்தியாவுக்குப் பெருமையைத் தேடித் தரும் விதமாக உயர்வார் என நம்புகிறோம். அதற்காக கோகுலம் சார்பில் கை குலுக்குவோம்!




ஜிம்னாஸ்டிக் ராணி!

வாசமும், சந்தமும்...



'பலே'கதை : சி. மாலதி / தலைப்பு : எஸ். காருண்யா / ஓவியங்கள் : பிள்ளை



பூங்காவனமும், அவள் மகன் குப்பனும் கடைவீதி வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

அங்கு ஒரு பூக்காரி, பூ விற்று கொண்டிருந்தாள்.



வாசனையாக இருந்த மல்லிகைப் பூவை, பூங்காவனம் வாங்க விரும்பினாள்.

''மிகவும் வாசமாக இருக்கிறதே. மல்லிகைப் பூ முழம் என்ன விலை?'' என்று கேட்டாள்.



பேராசைக்காரியான பூக்காரி ''ம்... முழம் பத்து ரூபாய்!'' என்றாள்.

''என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. வேண்டாம்'' என்று நகர்ந்தாள், பூங்காவனம்.



''வாங்கவிட்டால் பரவாயில்லை, பூவின் வாசனையை எல்லாம் நீ முகர்ந்து கொண்டு விட்டாய். வாசனையில்லாத பூவை இனிமேல் யார் வாங்குவார்கள்? பணத்தை கொடுத்து விட்டுப் போ'' என்றாள் பூக்காரி.



பயந்துபோன பூங்காவனம், இடுப்பிலிருந்து சுருக்குப் பையை எடுத்து காசுகளை எண்ணலானாள். 'கலகல'வென சில்லறைச் சத்தம் கேட்டது.

சமயோசித மூளை உடைய குப்பன், ''அம்மா காசுகளை உள்ளேயே போடுங்கள். கொடுக்க வேண்டாம்'' என்றான்.





''தம்பி ஏன் தடுக்கிறாய்?'' கேட்டாள் பூக்காரி.

''சத்தம் கேட்டதல்லவா? நாங்கள் முகர்ந்த வாசனைக்குக் காசின் சத்தத்தை நீ கேட்டது சரியாய்ப் போயிற்று'' என்று கூறினான் குப்பன்.

அவனுடைய புத்திசாலித் தனத்தைக் கண்டு வியந்த பூக்காரி, ''இந்தாம்மா, இந்த ஒரு முழம் பூவை நீயே வைத்துக்கொள்'' என்றாள்.





''இனமாக எங்களுக்கு எதுவும் வேண்டாம். இந்தாருங்கள், ஐந்து ருபாயை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கூறி, பூக்காரியிடம் காசை கொடுத்துவிட்டு, இருவரும் நகர்ந்தனர்.




எப்பொழுதும் ஜன்னல் அருகே அமர்ந்து இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டே இருப்பார். அந்த ரசனையில் பிறந்ததுதான் கதைக்கான கரு!

சிறுகதைச்

சிறுகதைகளைப் படிப்பதென்றால் எல்லோருக்குமே பிடித்தமான விஷயம்தான். சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோராலும் 'ரஸ்கின் பாண்ட்' சிறுகதைகள் மிகவும் விரும்பிப் படிக்கப்படுகின்றன.

'பாண்ட்' என்று செல்லமாக அழைக்கப்படும் இவர், 1934ஆம் வருடம் மே மாதம் 19ல் ஹிமாசலப் பிரதேசத்தில் பிறந்தார். பத்து வயதிலேயே தந்தையை இழந்த 'பாண்ட்'டுக்கு உலகமே இருண்டதாக காட்சி அளித்தது.

வெறுமை உணர்வினால் ஆட்கொள்ளப்பட்ட பாண்ட், எப்பொழுதுமே 'சிடுசிடு' வென்றே காணப்பட்டார். முன் கோபமும் அதிகமாக இருந்தது.



தலைப்பு : எம்.பரத்

எப்பொழுதும் ஜன்னல் அருகே அமர்ந்து இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டே இருப்பார். அந்த ரசனையில் பிறந்ததுதான் கதைக்கான கரு!

தம் மனத்தில் தோன்றும் எண்ணங்களை ஒரு புத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்வார். இதைப் பார்த்த அவரின் குடும்பத்தார், நேரத்தை வீணடிப்பதாக ஏச ஆரம்பித்தனர்.

அவர், தம் பதினேழாவது வயதில் 'தி ரூம் ஆன் த ரோடு' (The room on the road) என்கிற நாவலை எழுதினார். அதற்கு இங்கிலாந்து நாட்டின் பரிசு கிடைத்தது. 1992ல் எழுதிய 'ஹவர் ட்ரீஸ் டில் க்ரோ இன்டெஷ்ரா' (Our Trees till grow in Dehra) என்கிற ஆங்கில நூலுக்கு இந்தியாவின் 'சாகித்ய அகாதெமி' விருது கிடைத்தது.

சக்கரவர்த்தி



இந்தியாவிலிருக்கும் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர், அதிலும் குறிப்பாக சிறுவர்களுக்கான சிறுகதைகளை அதிக அளவில் எழுதி பாராட்டுப் பெற்றவர். 1999ல் 'பத்மஸ்ரீ' விருதையும் பெற்றார்.

நேரத்தை வீணடிப்பவன் என்று பேசியவர்களெல்லாம் புகழும்படியாக நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும், குழந்தைகளுக்காக முப்பது புத்தகங்களும், பிரயாணக் கட்டுரைகளும், பாடல்களும், கவிதைகளும் எழுதிக் குவித்தார்.



அவரின் குறிப்பிடத்தக்க சிறுகதைகளான 'கோஸ்ட் ஸ்டோரீஸ் ஃப்ரம் ராஜ்' (Ghost stories from Raj), 'எ சீசன் ஆஃப் கோஸ்ட்' (A season of ghosts) போன்றவை சிறுவர் முதல் பெரியவர் வரை விரும்பிப் படித்த பேய்க் கதைகளாகும்!

இவர் பேய்க் கதைகளுக்கு எப்படி கதையைத் தயார் செய்வார் தெரியுமா? இரவில் படுத்துக் கொண்டிருக்கும் பொழுது யாரோ தம் முதுகைத் தட்டுவது போலவும், தம்மிடம் பேசுவது போலவும் தாமே கற்பனை செய்து கொள்வார்.

இவரின் சிறுகதைகள் தொகுப்பினைக் கொண்டு 'தி ப்ளூ அப்பிரெல்லா' என்கிற பெயரிலும், 'எ ஃப்ளைட் ஆஃப் பிஜியன்' கதையைக் கொண்டு 'ஜுனூன்' என்கிற பெயரிலும் திரைப் படங்கள் இயக்கப்பட்டன. மேலும் 'ஏக் தா ரஸ்டி' என்று தொலைக்காட்சித் தொடரும் ஒளிபரப்பப்பட்டது.

சமீபத்தில் 'ரூபா அண்ட் கோ' நிறுவனமும், 'ஒடிஸி ஸ்டோர் புக்' நிறுவனமும் இணைந்து 'ரஸ்கின் பாண்ட்'-ஐ சென்னைக்கு வரவழைத்தன. தம்முடைய புத்தகங்களைப் பெரும் அளவில் படிக்கும் சிறுவர் சிறுமியரைக் கண்டு மிகவும் ஆனந்தம் அடைந்தார். தாம் பிறவி எடுத்த பயனை அடைந்ததாகச் சொல்லி, பிறந்த ஊருக்குச் சென்றார் பாண்ட்! ○

வேஷம்

மீனுக்குட்டிக்கு ராதை வேஷம் போட்டுக் கொள்ளப் பிடிக்கவேயில்லை! ஆனால் காலை எழுந்ததிலிருந்து அப்பா, அம்மா, பக்கத்து வீட்டு அக்கா மூவரும் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ண ஜயந்தி கொண்டாடுவதற்காக 'பிளே ஸ்கூலில்' எல்லா குழந்தைகளும் ராதா அல்லது கிருஷ்ணன் வேஷத்தில் வர வேண்டும் என்று பூர்ணிமா டீச்சர் சொல்லிவிட்டார். மீனுவுக்கு கிருஷ்ணனைத் தெரியும். கையிலே வெண்ணெய் வைத்துக் கொண்டு சிரிப்பான். ஆனால், யார் இந்த ராதை?

மீனுவின் கன்னத்தை அக்கா அழுத்திப் பிடிக்க, அம்மா அவள் நெற்றியில் வட்டமாகப் பொட்டு வைத்து, அதைச் சுற்றிலும் குட்டிக் குட்டிப் புள்ளிகள் வைத்தாள். புருவத்தின் மேலும் புள்ளிகள்! மீனுவுக்குக் கன்னமெல்லாம் வலித்தது. அசைத்து விட்டாள். பொட்டு தீற்றிக் கொண்டது. அம்மா கோபித்துக் கொண்டாள்.

''பாரு! பாரு! எல்லா பிள்ளைகளும் அழகா வேஷம் போட்டுக்கிட்டு வருவாங்க... நீ மட்டும் அழுக்குப் பொண்ணா போய் நிக்கப் போறே!''



அம்மா பொட்டை சரி செய்வதற்குள் அக்கா காதில் ஜிமிக்கி மாட்டி திருகாணியை அழுத்திவிட்டாள். கருக்கென்று திரும்பவும் வலித்தது. ''ஆ! எனக்கு பசிக்குது...! பசிக்குது!'' என்று மீனு கத்தினாள்.

ஊஹீம்! அம்மா அலங்கரிப்பதை நிறுத்தவில்லை. பளபளவென்று அக்காவின் துப்பட்டாவை முன்னுச்சியில் வைத்து 'ஸ்லைட்' குத்தியபோது மீனு அழவே ஆரம்பித்துவிட்டாள்.

''அசட்டுப் பாப்பாதான் அழும்... இங்க பாரு, எத்தனை அழகா இருக்கே...'' கண்ணாடியை மீனுவுக்குக் காட்டினாள் அக்கா.

மீனுக்குட்டிக்கு அதில் தெரிந்த உருவத்தைப் பிடிக்கவேயில்லை. கண்ணிலிருந்து காதுவரை மையால் கோடு இழுத்து.... கழுத்து, கையெல்லாம் ஒரே கனம்! கோபமாக வந்தது. நிஜமாகவே பசி வேறு. தலையில்

குத்தியிருந்த துணியைக் கழற்றி வீசினாள் மீனுக்குட்டி. அதோடு மல்லிப் பூச்சரமும் மூலையில் போய் விழுந்தது!

''வேஷம் போட்டுக்க மாட்டேன்!'' என்று கத்தினாள்.

அன்று சாயங்காலம் அப்பாவும் அம்மாவும் மீனுக்குட்டியைக் கொஞ்சவே இல்லை.

''எல்லாக் குழந்தைகளும் எத்தனை ஜோரா வேஷம் போட்டுக்கிட்டு வந்து கோலாட்டம் ஆடினாங்க தெரியுமா? இவ மட்டும் தான் எல்லாத்தையும் பிச்சு எறிஞ்சுட்டா! வெறும் கவுனைப் போட்டுக்கிட்டுப் போய் நின்னா!'' அம்மா, அப்பாவிடம் வருத்தப்பட்டாள்.

மீனுக்குட்டி பார்த்துக் கொண்டே இருந்தாள். அப்பா வாங்கி வந்திருந்த காய்கறி பையில் இரண்டு நீளமான முருங்கைக் காய்கள் இருந்தன. ஓடிப்போய் அவற்றை எடுத்து வந்தாள். அப்பா முகம் துடைத்து விட்டுப் போட்டிருந்த துண்டை மேலாக்கு போல் போட்டுக் கொண்டு, முருங்கைக் காய்களைக் கோலாட்டக் கழிகள் போல் தட்டிக்கொண்டே பாடியபடி கூடத்தைச் சுற்றி சுற்றி ஓடினாள்.

''கண்ணன் எங்கள்
கண்ணனாம்...
கார்மேக வர்ணனாம்...''

அப்பாவும் அம்மாவும் வருத்தத்தை மறந்து, கைதட்டிக் கொண்டாடினார்கள். ''இந்த வேஷமே அழகாயிருக்கு'' என்றார் அப்பா!

போட மாட்டேன்

'கலகல' கதை : சீதா ரவி
தலைப்பு : எம்.ஏ. ஹரிணி
ஓவியம் : பிள்ளை









இதுவரை மைதானத்தில் கிரிக்கெட் மட்டையைப் பிடித்து, தமது அதிரடி ஆட்டத்தால் கோடிக் கணக்கான ரசிகர்களின் மனம் கவர்ந்த சச்சின் டெண்டுல்கர், இப்போது இன்னொரு புதிய அவதாரம் எடுத்திருக்கிறார். அதில், எங்கெல்லாம் அக்கிரமம் நடக்கிறதோ, அங்கெல்லாம் இவர் சென்று, கெட்டவர்களை அழித்து, நல்லவர்களைக் காப்பாற்றப் போகிறார். ஆம்! குழந்தைகளுக்குப் பிடித்த காமிக்ஸ் புத்தகம் மூலமாக, வலம் வரப் போகிறார் சச்சின்!

சச்சினை மையமாக வைத்து உருவாகும் காமிக்ஸ் சூப்பர் ஹீரோ கதாபாத்திரத்தின் பெயர் **மாஸ்டர் பிளாஸ்டர்** (அதிரடி மன்னன்). உலகப் புகழ் பெற்ற 'சர் ரிச்சர்ட் பிரான்சனுடைய **'வெர்ஜின் காமிக்ஸ்,'** இந்தியாவின் டோட்டல் மல்டிமீடியா என்ற நிறுவனத்துடன் கைகோத்துக் கொண்டு, இந்த முயற்சியில் ஈடுபடுகிறது. ''தம்முடைய கிரிக்கெட் திறமையால் ஏற்கெனவே அவர் ஒரு சூப்பர் ஹீரோவாகத்தான் திகழ்ந்து கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர், ஒரு காமிக்ஸ் புத்தகத்தில் புதிய உருவெடுத்திருப்பது, இளைய



வாசகர்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் துளியும் சந்தேகமில்லை'' என்று கூறுகிறது டோட்டல் மல்டிமீடியா. அதில் இடம் பெறப்போகும் கதைகளை இந்திய சூழ்நிலையை மனத்தில் கொண்டு, இந்தியக் குழந்தைகளைக் கவரும் வண்ணம், உருவாக்கப் போகிறார்கள். இதுவரை கிரிக்கெட் மட்டையைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் சச்சினைப் பார்த்து ரசித்தவர்கள், இனிமேல் கையில் நீண்ட வாளுடன் அக்கிரமக்காரர்களை அழிக்கும் சாகசத்தைப் பார்த்து, படித்து, ரசிக்கப் போகிறீர்கள்!



முதலில் இந்தியாவில் மட்டும் வெளியாகவிருக்கும் இந்த சச்சின் காமிக்ஸ், அடுத்து, மற்ற கிரிக்கெட் ஆடும் நாடுகளிலும், உலகின் மற்ற நாடுகளிலும் விற்பனையாகும். பிறகு, வீடியோ விளையாட்டுகளும், திரைப்படங்களும் கூட சச்சின் - மாஸ்டர் பிளாஸ்டர் கதாபாத்திரத்தை வைத்து எடுக்கப் போகிறார்களாம். ஒவ்வொரு கதையையும் சச்சின் டெண்டுல்கரிடம் முன்னதாகவே சொல்லி, அவரது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்டுக் கொண்டு, அதன்படித்தான் காமிக்ஸ் புத்தகங்களை உருவாக்கப்போகிறார்கள் காமிக்ஸ் வெளியீட்டாளர்கள்.



வழக்கமாக காமிக்ஸ் புத்தகமென்றால் பத்து முதல் பதினான்கு வயது வரையிலான குழந்தைகள்தான் வாசகர்களாக இருப்பார்கள். ஆனால், இந்தியாவைப் பொறுத்த வரையில் சச்சின் டெண்டுல்கருக்கு குட்டீஸ் முதல் தாத்தாக்கள் வரை கோடிக்கணக்கான ரசிகர்கள் உண்டு என்பதால், அனைவருமே சச்சின் காமிக்ஸ் புத்தகங்களைப் படிக்க ஆர்வம் காட்டுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. முதலில் ஆங்கிலத்தில் வெளியானாலும், விரைவிலேயே, இந்தியிலும் மற்ற சில இந்திய மொழிகளிலும் சச்சின் காமிக்ஸ் புத்தகங்கள் வெளியாக இருக்கின்றன.

அதெல்லாம் சரி! முதல் காமிக்ஸ் புத்தகம் எப்போது வெளிவரும்? கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள்! இந்த வருடம் இறுதிக்குள் உங்களை எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வந்து விடுவார் மாஸ்டர் பிளாஸ்டர் சச்சின்! ○

அற்புதப்

புதிர்க் கதை :
அருண் சரண்யா

"என்னம்மா வேணும் காபியா? டீயா?'' என்று கேட்டாள் அஸ்வினியின் அம்மா. அஸ்வினியின் வகுப்புத் தோழியான தீபா கொஞ்சம் சங்கடத்துடன் ''எனக்கு எதுவும் வேணாம் ஆன்ட்டி'' என்றாள்.

''அதெப்படி? ஏதாவது குடிச்சுத்தான் ஆகணும். உங்க ரெண்டு பேருக்கும் நீக்கு முன்னாலே இருப்பதைப் போட்டு எடுத்துட்டு வர்றேன்'' என்றபடி உள்ளே சென்றாள் அஸ்வினியின் அம்மா.

தீபாவுக்கு ஒன்றும் புரியவில்லை! ''உங்க அம்மா என்ன சொன்னாங்க? என் காதிலே சரியா விழலேன்னு நினைக்கிறேன்'' என்றாள் குழப்பத்துடன்.

அஸ்வினி பெரிதாகச் சிரித்தாள். ''எங்க அம்மாவுக்கு புதிர்களிலே ரொம்ப இஸ்டம்! அவங்க பேசும்போதே நிறைய புதிர் போடுவாங்க. இப்பகூட நமக்கு டீ போட்டு எடுத்துகிட்டு வர்றதா சொல்லியிருக்காங்க... என்ன புரியல்லியா? சரி, விளக்கறேன். நீ என்பதை ஆங்கிலத்திலே எப்படி சொல்வே?'' என்று கேட்டாள்.

''யூ'' என்று பதில் கூறினாள் தீபா.

''ஆங்கில எழுத்துகளிலே யூ - அதாவது U என்கிற எழுத்துக்கு முன் எழுத்து Tதானே? அதைத்தான் போட்டு எடுத்துட்டு வர்றேன்னாங்க எங்கம்மா.''

''ரொம்ப வேடிக்கையா இருக்கே'' என்றாள் தீபா.

''அது அப்படித்தான். அம்மா போடும் புதிர்களை யார் முதலில் கண்டுபிடிப்பது என்பதிலே எனக்கும் எங்க அண்ணன் திவாகருக்கும் பெரிய போட்டியே உண்டு'' என்றாள் அஸ்வினி.

அஸ்வினியின் அப்பா துபாயில் வேலை செய்கிறார். இரு வருடங்களுக்கு ஒருமுறைதான் அவர் இந்தியாவுக்கு வந்து செல்வார். அவர் வரும்



தலைப்பு : ஆர். நவீன்பிரசாத்



ஓவியம் : லலிதா

பரிசு

போது நிறைய பரிசுகள் வாங்கி வருவார் என்றும், துபாயிலிருந்து சென்னைக்கு வரும் தம் நண்பர்கள் மூலம் வீட்டுக்கு அவ்வப்போது நிறைய வெகுமதி பொருட்களை அனுப்புவார் என்றும் அவளுக்குத் தெரியும்.

அம்மா தேனீர்க் கோப்பைகளுடன் வந்து சேர, அதைக் குடித்துவிட்டுக் கிளம்பினாள் தீபா.



மறுநாள்...

தொலைபேசி ஒலித்தது. அம்மா ரிசீவரை எடுத்துப் பேசினாள். அவள் முகத்தில் பரவிய சந்தோஷத்தைக் கொண்டே அப்பாதான் பேசுகிறார் என்பது அஸ்வினுக்கும், திவாகருக்கும் புரிந்தது.

''ஆமாம்... அப்படியா...? நாளைக்கு நம்ம திவாகருக்கு பிறந்தநாள் தெரியும்ல...? சரி! சரி!'' என்று எதையோ பேசிய அம்மா, ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பினாள்.

குழந்தைகளின் பிறந்த நாட்களுக்கு எப்படியும் ஏதாவது பரிசை அனுப்பி விடுவார் அப்பா.

''இந்த முறை எனக்கு என்ன பரிசு அனுப்பியிருக்கிறார் அப்பா?'' என்று கேட்டான் திவாகர். அம்மா பதில் பேசவில்லை. ஒரு பேப்பரை எடுத்து வைத்துக்கொண்டு அதில் எதையோ எழுதத் தொடங்கினாள்.

''அம்மா, நான் கேட்டேனே'' என்று

திவாகர் தொடங்க, அம்மா தம் வாயில் விரலை வைத்து ''உஷ், அதெல்லாம் கொஞ்ச நேரம் கழித்து சொல்கிறேன்'' என்றாள்.

''ரொம்பத்தான் சஸ்பென்ஸ் வைக்கிறீங்க'' என்று முணுமுணுத்தபடி திரும்பினான் திவாகர்.

சிரித்த அம்மா, தாம் எழுதிய தாளை அவர்களிடம் நீட்டினாள். பிறகு இதைக் கண்டுபிடிங்க. ''ஒன்...டு...த்ரீ...'' என்று எண்ணத் தொடங்கினாள்.

அஸ்வினியும் திவாகரும் அம்மா கொடுத்த தாளைப் பார்த்தனர். அதில் இப்படி எழுதியிருந்தது:

அழகிய கூந்தல்
ஏப்ரல் தடுப்பு
முப்பால் எழுத்து
அதிக வருமானம்
தாண்டிவரும் சேலை
ஞாயிற்றுக் கிழமை
நான் இருக்கிறாயா?
மாட்டிக் கொண்டார்



“நாளைக்கு உனக்கு கிடைக்கப் போகிற பரிசு என்னன்றது அதில் இருக்கிறது!”

''நாளைக்கு உனக்கு கிடைக்கப் போகிற பரிசு என்னன்றது அதில் இருக்கிறது. உனக்கு ரொம்ப பிடிச்ச பரிசு அது!'' என்றாள் அம்மா.

திவாகரும் அஸ்வினியும் அம்மா எழுதியதை ஆராயத் தொடங்கினர். ''அழகிய கூந்தல்... தாண்டிவரும் சேலை...என்னடா இது ஒரே பொம்பளைங்க சமாச்சாரமா இருக்கு'' என்று கேலி செய்தாள் அஸ்வினி.

''அதெல்லாம் இருக்காது... முப்பால் எழுத்துன்னு இருக்குதே! ஒருவேளை திருக்குறள் நூலைத்தான் பரிசாக அனுப்பியிருக்கிறாரோ?

மேலும் பலவிதங்களில் அந்த தாளை ஆராய்ந்தார்கள் இருவரும்.

''நான் இருக்கிறாயா... என்ன இது தப்பான வாக்கியம்... ஞாயிற்றுக்கிழமைன்னு எதை அம்மா குறிப்பிட்டிருக்காங்க?''

சமையலறையிலிருந்து அம்மா வெளிப்பட்டாள். ''ரெண்டு க்ளு தரேன். அந்தப் பரிசு ''அ'' என்கிற எழுத்தில் தொடங்குது.''


''ரெண்டாவது க்ளு என்ன?'' என்று கேட்டான் திவாகர் பொறுமையில்லாமல்.

''ஒன்...ஒன்...டு...டு...த்ரீ...த்ரீ'' என்று கூறிவிட்டு புன்னகையுடன் மௌனமாகி விட்டாள் அம்மா.

மேலும் ஐந்து நிமிடங்கள் கடந்தன.

''ஒருவேளை இப்படி இருக்குமோ?'' என்று அஸ்வினி எதையோ குறிப்பிட, திவாகர் அவசரமாக அந்தத் தாளை ஆராயத் தொடங்க, விடை தெரிந்தது. அடுத்த கணம் தாங்க முடியாத மகிழ்ச்சியுடன் ''இவ்வளவு பெரிய பரிசா கிடைக்கப் போகுது? எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்குது'' என்றபடி, அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். அஸ்வினியும் ஆனந்தத்தில் குதிக்கத் தொடங்கினாள்.

அப்படி என்ன பரிசு திவாகருக்குக் கிடைக்கப் போகிறது?
கண்டுபிடியுங்கள்! விடை எதிர் பக்கம்.


அடுத்த இதழ்...
டிசம்பர் 2007
கோகுலம்
கலை,
கலாசார
சிறப்பிதழ்!
இந்திய நாட்டின் பல்வேறு
மாநில மக்களின் பழக்க வழக்கங்கள்...
வரலாற்று சிறப்புமிக்க இடங்கள்...
அழகழகான புகைப்படங்களுடன்
அற்புதமான தகவல்கள்!
இப்பவே கடைக்காரரிடம் சொல்லி வைங்க!

தேன்மொழி - கனிமொழி

கருத்து, படம் : பிள்ளை




கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


176


177


178


179


180


181


182


183


184


185


186


187


188


189


190


191


192


193


194


195


196


197


198


199


200





பெயர் மற்றும் விவரங்கள் 57–ஆம் பக்கம்...

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Srilanka